# வடமாகாண பொலிஸ் அதிபருக்கு எதிராக சுந்தரர் வழக்கு!

Registered as a News Paper in Ceylon விலை சதம் 15 ★ ★

# ஈழநாடு

THE EELANADU

National Tamil Daily

தபால் பெட்டி எண் : 49
போன் : 389

மலர் 12
இதழ் 152
தேசிய தினசரி

யாழ்ப்பாணம் ஆனி 29 ஜமா. அவ் 8 திங்கட்கிழமை [13-7-70]

**ஈழநாடு சந்தா**

| | தினப்பதிப்பு | வாரப் பதிப்பு |
|---|---|---|
| 3 மாதம் | ரூ. 8-00 | ரூ. 4-00 |
| 6 மாதம் | ரூ. 34-00 | ரூ. 7-50 |
| வருடம் | ரூ. 66-00 | ரூ. 14-00 |

முற் பணம் கட்டவேண்டும். தபால் அல்லது ஆள்மூலம் அனுப்பப்படும்.

## இன்று விசாரணை நடைபெறும்

மாவிட்டபுரம், ஞாயிறு வடமாகாண பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்துக்கு எதிராக மாவை கந்தன் ஆலய நிர்வாகி திரு. ஸி. சுந்தரலிங்கம் மல்லாகம் மாஜிஸ்திரேட்கோர்ட்டில் இன்று வழக்கொன்றைத் தாக்கல் செய்தார். பொலிஸ் அதிபருடன் காங்கேசன்துறை தலைமைக் காரியாலய இன்ஸ்பெக்டர் ஜேக்கப் சார்ஜன்ட் பொன்னம்பலம் ஆகியோருடன் மற்றும் மாவை ஆலயக் கதவுகளை பூட்டவிடாது தடுத்து நிற்பதாக பன்னிரண்டு பொலிஸாருக்கு எதிராகவும் சுந்தரர் இந்த வழக்கைத் தாக்கல் செய்திருக்கிறார்.

486, 110, 434 பிரிவுகளுக்கு அமைய இந்த வழக்கை சுந்தரர் தாக்கல் செய்தார்.

பிரதிவாதிகளுக்கு உடனடியாக கட்டளை அனுப்பி வைக்குமாறு உத்தரவிட்ட மாஜிஸ்திரேட் திரு. ஆனந்தக்குமாரசாமி நாளை விசாரணை நடைபெறுமென்று தெரிவித்தார்.

### பொலிஸ் அதிபர் கருத்து

இது சம்பந்தமாக பொலிஸ் ஆதிபரை விசாரித்த போது, 'அரசாங்கத்தின் உத்தரவின்படியே நாங்கள் நடக்கிறோம். வழக்குப் பற்றிச் சொல்வதற்கொன்றுமில்லை' என்று கூறினர்.

# வடக்கில் தார்ப்பூச்சு சம்பவம்: விஷமிகள் மீது கண்காணிப்பு

## 17ல் மௌன ஊர்வலம்!

### வழிபடுவோர் சங்கம் தீர்மானம்

மாவிட்டபுரம், ஞாயிறு வடமாகாண பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கத்தை உடனடியாக இடமாற்றம் செய்ய வேண்டுமெனக் கோரும் தீர்மானம் மாவைக் கந்தன் ஆலய வழிபடுவோர் சங்க கூட்டத்தில் நறைவேற்றப் பட்டது.

திரு ஸி. சுந்தரலிங்கம் தலைமையில் நடந்த இந்தக் கூட்டத்தில் இம் மாதம் 17-ம் திகதி பொலிஸார் ஆலய விஷயத்தில் நடந்து கொண்ட விதத்துக்கு எதிர்ப்புத் தெரிவிக்குமுகமாக மாபெரும் மௌன ஊர்வலமொன்றை நடத்துவதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

ஆலயத்திலிருந்து பொலிஸார் அப்புறப்படுத்தப் படும்வரை ஆலயம் பற்றி எந்த விஷயத்தையும் எவருடனும் பேச்சுவார்த்தை நடாத்தக் கூடாதென்று சுந்தரரைக் கோருவதென்றும் தீர்மானிக்கப் பட்டது.

சத்தியாக்கிரகம், உண்ணாவிரதம் போன்ற போராட்டத்தை நடாத்துவதில்லை என்றும் தீர்மானிக்கப்பட்டது.

### தர்மகர்த்தா கோரிக்கை

மாவை ஆலயத்தில் பூசைகள் நடைபெற பொலிஸாரை அங்கிருந்து வாபஸ் பெற உதவும்படி தர்மகர்த்தா பிரமஸ்ரீ துரைசாமி குருக்கள் யாழ். அரசாங்க அதிபரையும், வலி வடக்கு காரியாதிகாரியையும் கோரியுள்ளார்.

'நிலமற்ற சிறுபான்மைத் தமிழருக்கு

## தனியாரின் அதிக நிலம் பகிர்ந்தளிக்கப்படும்"

### காணி அமைச்சர் தகவல்

உடுப்பிட்டி, ஞாயிறு நிலமற்ற சிறுபான்மைத் தமிழரின் பிரச்னை பற்றி ஆராயும்முகமாக நியமன எம். பி யும் சிறுபான்மைத் தமிழர் மகாசபைத் தலைவருமான திரு. எம். ஸி. சுப்பிரமணியம் தலைமையில் சென்ற தூதுகோஷ்டி காணி விவசாய அமைச்சர் திரு. கொப்பேகடுவாவுடன் பேச்சுவார்த்தை நடாத்தியது.

இத்தூதுக் குழுவில் சிறுபான்மைத் தமிழர் மகா சபை நிர்வாகக் காரியதரிசி திரு. சி. செல்லையா, மகா சபைப் பொதுக் காரியதரிசி திரு பி. ஜே. அன்ரனி ஆகியோர் அங்கம் வகித்தனர்.

சிறுபான்மைச் சமூக மக்களுக்குக் குடியிருக்க நிலமும் விவசாயம், தோட்டப் செய்யக் காணிகளும் கொடுக்க வேண்டும் என்று தூதுக்குழு விவசாய அமைச்சரைக் கோரியது.

தூதுகோஷ்டியினரின் கோரிக்கைகளை ஏற்றுக்கொண்ட அமைச்சர் முடிக்குரிய நிலங்களை எடுத்துப் பகிர்ந்து கொடுப்பதுடன் தேவைக்கு அதிகமாகக் கூடுதலாக நிலமுள்ளவர்களுடைய நிலங்களை அரசாங்கம் சுவீகரித்துச் சிறுபான்மைத் தமிழருக்குப் பகிர்ந்து கொடுக்க உடன் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக தெரிவித்தார்.

## கொக்குவிலில் இருவர் கைது; வவுனியாவிலும் ஒரு நிகழ்ச்சி

யாழ்ப்பாணம், ஞாயிறு

**பெயர்ப்பலகைகள்மீது உள்ள சில எழுத்துக்கள்மீது தார்பூசிக்கொண்டிருந்ததாகக் கருதப்படும் இருவரை யாழ்ப்பாணம் பொலிசார் நேற்றுக் கைதுசெய்தனர். கொக்குவிலில் நடந்த இச்சம்பவம் சம்பந்தமாக இன்னும் சிலரைப் பொலிசார் தேடிவருகின்றனர். கைதுசெய்யப்பட்ட இருவரும் ரிமாண்டில் வைக்கப்பட்டுள்ளனர்.**

கடந்த சிலவாரங்களாக பெயர்ப்பலகைகளில் தார்ப்பூச்சு சம்பவம் அடிக்கடி இடம்பெற்று வருவதாகவும் வவுனியாவிலும் இதுமாதிரியான சம்பவங்கள் நடைபெறுவதாகவும் பொலிஸ் உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவுனியாவில் கார் ஒன்றின் இலக்கத் தகட்டில் ... யாழ்ப்பாணம் விரைந்துள்ளது.

வடபகுதியில் ஊர்களில் திசையைக்காட்டும் பலகைகள்மீதும் தார் பூசப்படுகிறது. இதுசம்பந்தமான நடவடிக்கைகளில் யார், யார் ஈடுபடுகிறார்கள், எந்த அரசியல் கட்சிக்கும் இதில் தொடர்புண்டா, எந்த ஒரு இயக்கத்துக்கும் இதில் ஈடுபாடு உண்டா என்பது பற்றி தீவிரபுலன் விசாரணை செய்யும்படி வட பகுதி பொலிஸ் அதிபர் திரு. ஆர். சுந்தரலிங்கம் சகலபொலிஸ் இன்ஸ்பெக்டர்களுக்கும் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

தார்ப்பூச்சு வேலைகளில் ஈடுபடுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் அதிபர் எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

## பெரும் மாற்றத்தை மக்கள் எதிர்பார்க்கிறார்கள்

### மகாவலி அபிவிருத்தி சபைக் கூட்டத்தில் அமைச்சர் மைத்திரி

கொழும்பு, ஞாயிறு "மக்கள் இந்த அரசாங்கத்திடம் பெரும் மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். இதனை நாம் விணடித்துக்கொள்ளக்கூடாது' என நீர்ப்பாசன, மின்சார அமைச்சர் திரு. மைத்திரி ... பல தொழில்நுட்ப அதிகாரிகள் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்.

இந்த நாட்டுத் தொழில் நுட்பஸ்தர்களின் திறமைக்கு முதலிடம் அளிக்கிறது நமது அரசு; இதனாலேயே அமைச்சரவையில் எஞ்சினி ... தென்ற தகவலையும் அமைச்சர் வெளியிட்டார்.

மகாவலி முதற்கட்ட வேலைகளுக்கு முழுக்கமுழுக்க உள்ளூர் தொழில்நுட்பத்தர்களுக்கே முதலிடம் அளிக்கப்படுமென்பதையும் அமைச்சர் வலியுறுத்திக் கூறினார்.

◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆◆

## தேர்தல்மனுக்களை விசாரிக்கும் நீதியரசர்கள்

கொழும்பு, ஞாயிறு தேர்தல் ஆட்சேப மனுக்...

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பான்மைத் தமிழர் மகா சபை நிர்வாகக் காரியதரிசி திரு. சி. செல்லையா, மகா சபைப் பொதுக் காரியதரிசி திரு. பீ. ஜே. அன்ரனி ஆகியோர் அங்கம் வகித்தனர்.

டைய நிலங்களை அரசாங்கம் சுவீகரித்துச் சிறுபான்மைத் தமிழருக்குப் பகிர்ந்து கொடுக்க உடன் நடவடிக்கைகள் மேற்கொள்வதாக தெரிவித்தார்.

யான சம்பவங்கள் நடைபெறுவதாகவும் பொலிஸ் உயர்தர அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

வவனியாவில் கார் ஒன்றின் இலக்கத் தகட்டில் பொறிக்கப்பட்டிருந்தஎழுத்துக்கள்மீது தார்பூசப்பட்டுள்ளதாம் கைவிரல் அடையாளபரிசோதனைக்காக கார் பொலிஸ் பாதுகாப்பில்வைக்கப்பட்டுள்ளது

கிளர்ச்சியை உண்டுபண்ணுவதற்காகவே இதுபோன்ற சம்பவங்கள் நடைபெறுவதாக பொலிசார் கருதுகின்றனர். வடபகுதியில் நாளாந்தம் அதிகரித்துவரும் தார்ப்பூச்சு சம்பவங்களில் ஈடுபடுபவர்களை கண்காணிப்பதற்காக கொழும்பிலிருந்து ரகசிய பொலிஸ் பிரிவுஒன்று

றது. இதுசம்பந்தமான நடவடிக்கைகளில் யார், யார் ஈடுபடுகிறார்கள். எந்த அரசியல் கட்சிக்கும் இதில் தொடர்புண்டா, எந்தவொரு இயக்[கத்]துக்கும் இதில் ஈடுபாடு [உ]ண்டாஎன்

றிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

தார்ப்பூச்சு வேலைகளில் ஈடுபடுபவர்கள்மீது கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென பொலிஸ் அதிபர் எச்சரிக்கைவிடுத்துள்ளார்.

கத்திடம் பெரும் மாற்றத்தை எதிர்பார்க்கிறார்கள். இதனை நாம் வீணடித்துக்கொள்ளக்கூடாது' என நீர்ப்[பாச]ன, மின்சார அமைச்சர் திரு. மைத்திரிபால சேனநாயக்கா இன்று தமது அமைச்சு அலுவலகத்தில் நடந்த புதிய மகாவலி அபிவிருத்திச் சபையின் கூட்டத்தில் உரைநிகழ்த்துகையில் தெரிவித்தார்.

மகாவலி அபிவிருத்தி சம்பந்தமாக விசாரணைசெய்த கமிட்டித் தலைவர் தபால் மந்திரி திரு. செ. குமாரசூரியர் உட்பட மற்றும்

கொண்டனர்.

இந்த நாட்டுத் தொழில் நுட்பஸ்தர்களின் திறமைக்கு முதலிடம் அளிக்கிறது நமது அரசு! இதனாலேயே அமைச்சரவையில் எஞ்சினியரை நியமித்தோம்; இன்னும் பல எஞ்சினியர்களுக்கு நல்ல பதவிகளை வழங்கியுள்ளோம் என்று அமைச்சர் தமது உரையில் மேலும் குறிப்பிட்டார்.

மகாவலி அபிவிருத்தி சம்பந்தமாகக் கவனிப்பதற்கு 120 பொறியியலாளர்கள் கொண்ட திட்டப் பிரிவு ஒன்று நிறுவப்படவிருக்கிற

## விசாரிக்கும் நீதியரசர்கள்

கொழும்பு, ஞாயிறு

தேர்தல் ஆட்சேப மனுக்களை விசாரிப்பதற்கு பிரதம நீதியரசரால் நியமிக்கப்பட்டுள்ள நீதியரசர்கள் வருமாறு:-

கண்டி - வி. ஏ. அலஸ்; டெடிகம - சமரவிக்கிரம; நிந்தவூர், பட்டிருப்பு - வீரமந்திரி; இரத்தினபுரி, நுவரெலியா - கிறேசர்; நீர்கொழும்பு - நித்தியதிவக்க; யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை - பண்டித குணவர்த்தன; வவனியா - தாமோரம்.

# பேராதனைப் பல்கலைக்கழக ஊழலை விசாரிக்க குழு!

கோட்டை, ஞாயிறு

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் உள்ள நிர்வாக, நிதி ஊழல்களை விசாரிக்க நால்வர் கொண்ட குழுவொன்றை கல்வி அமைச்சர் அல்ஹாஜ் பதியுதீன் மகமூத் நியமித்துள்ளார்.

இக் குழுவிற்கு மத்திய வங்கியைச் சேர்ந்த திரு. டபிள்யு. ராஜபுத்திரா தலைவராவர்.

இக்குழு இவ்வூழல்களை ஆராய்வதோடு இவ்வூழல்கள் மேலும் நடைபெறுமல் இருப்பதற்குரிய மாற்றுத் திட்டமொன்றையும் ஆராய்வார்கள் இவர்களுடைய அறிக்கை ஒரு மாத காலத்திற்குள் அமைச்சிடம் கையளிக்கப்படும்.

உள்ளூராட்சி சேவை அதிகார சபையில்

# தமிழர் இடம் பெறுததற்கு ப. ச. தலைவர் அதிருப்தி

யாழ்ப்பாணம், திங்கள்

'உள்ளூராட்சிச் சேவை அதிகாரசபைக்கு தங்களாற் புதிதாகநியமிக்கப்பட்டுள்ள அங்கத்தவர்களில் தமிழ்ப் பிரதிநிதி ஒருவரை நியமிக்காதது குறித்து காங்கேசன்துறை பட்டின சபை தலைவர் க. ஜெயபாலசிங்கம் அதிருப்திதெரிவித்து பொது விவகார உள்ளூராட்சி, உள்நாட்டு அமைச்சர் திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயகாவுக்கு மகஜர்அனுப்பி வைத்துள்ளார்.

''உள்ளூராட்சி நிர்வாகத் துறையில் தமிழ் மக்களும் சிங்கள மக்களுடன் துரிதமாகவும், சிறப்பாகவும் பங்குபற்றுவதற்கேற்றவகையில் எமது யசதிக்கேற்ற முறையில் தமிழ்ப்பிரதிநிதி ஒருவரை இச்சபைக்கு நியமிக்காததையிட்டு, எமது ஆழ்ந்த கவலையைத் தெரிவித்துக்கொள்கிறேம்'' என திரு. ஜெயபாலசிங்கம் தமது மகஜரில் தெரிவித்துள்ளார்.

இக்கடைசி நேரத்திலாவது எமது கோரிக்கைக்குச் செவிமடுத்து இச்சபையில் ஒரு தமிழ்ப்பிரதிநிதியையும் நியமித்தால் சமூக ஒற்றுமையைப்பலப்படுத்த உதவுவதாயிருக்கும் என்றும் மகஜரில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# 'கூட்டுறவுப்பண முதலீட்டில் மிகவும் கவனம் வேண்டும்'

## — கூட்டுறவு ஆணையாளர்

வேலணை, ஞாயிறு

''கூட்டுறவு ஆக்க ஆணையாளராகப்பதவி ஏற்றபின் முதல் தடவையாக இவ்விழாவில் கலந்துகொள்கிறேன். கூட்டுறவு இயக்கத்தில் வடபகுதி மக்கள் காட்டும் ஆர்வம் என்னைக் கவர்ந்துள்ளது. இவ் இயக்கத்தின் வெற்றி மக்கள் வெற்றியாகும் மக்களிடையே உள்ள பொருளாதாரப் பிரச்னைக்குத் தீர்வுகாண ஒரே வழிகூட்டுறவு இயக்கம்தான்.''

இவ்வாறு கூட்டுறவு ஆக்க ஆணையாளரும், கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளருமான திரு. ஆர். ஜி. ஜி. ஒல்கட் கூறினுர்.

தீவுப்பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச 25 வது ஆண்டு நிறைவுவிழாவில் திரு. ஒல்கட் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு பேசினுர்.

வேலணை மத்திய மகா வித்தியாலய மண்டபத்தில் சமாசத் தலைவர் வழக்கறிஞர் திரு. ப. கதிரவேலு தலைமையில் நடந்த விழாவில் திரு. ஒல்கட் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

இன்றுள்ள மக்கள் அரசாங்கம் கூட்டுறவு இயக்கத்தில் நம்பிக்கைவைத்துள்

(4-ம் பக்கம் பார்க்க)

# பாரிஸுக்கு இலங்கைக் குழு புறப்பட்டது!

கொழும்பு, ஞாயிறு

பாரிஸில் நடக்கும் தமிழாராய்ச்சி மகாநாட்டில் கலந்து கொள்வதற்கு இலங்கைக் குழு நேற்று இரவு விமானத்தில் பாரிஸ் புறப்பட்டது. கலாநிதி க. கைலாசபதி, கலாநிதி சு. வித்தியானந்தன், திரு. கமால்தீன் ஆகிய மூவரும் இக்குழுவில் அங்கம் வகிக்கின்றனர்.

# வடபகுதி அசைஸ்; முதல் தடவையாக சிங்களத்தில் பிரகடனம்

யாழ்ப்பாணம், திங்கள்

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தின் சரித்திரத்தில் நேற்று முதல்தடவையாக, நீதிமன்ற அறிவிப்பாளர் சிங்களத்தில் பிரகடனம் செய்தார். இதுவரை காலமும், அசைஸ் நீதிமன்றத்தில் ஆங்கிலத்தில் பிரகடனம் செய்யப்பட்டு வந்தது. பொலிஸாரின் மரியாதை அணிவகுப்பு வழக்கம் போல், நேற்று சிங்களத்தில்நடைபெற்றது.

வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தின் இரண்டாவது பருவகால விசாரணை நேற்றுக்காலை 11 மணிக்கு, நீதியரசர் ஏ.எல். சிறிமானே முன்னிலையில் ஆரம்பமானது. நீதியரசர் நாகவிகாரைக்கு சென்று வழிபாடு செய்த பின்னர் நீதிமன்றத்தை வந்தடைந்தார்.

நீதிமன்றத்தில் பிரகடனமும், மற்றும் அறிவித்தல்களும் நேற்று முதல் தடவையாக, நீதிமன்ற அறிவிப்பாளரினல் சிங்களத்தில் நடைபெற்றது. ஜூரிசபையினருக்கு அசைஸ் குமாஸ்தா அதனை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துக் கூறினுர்.

வடபகுதி பிஸ்கால் அதிகாரியான பதில் அரசாங்க அதிபர் திரு ஜே எம் சபாரத்தினம், வழக்கு விசாரணைக்கான கட்டளைகளை நீதியரசரிடம் கையளித்தார். யாழ்ப்பாணம் பொலிஸாரின் மரியாதை அணி வகுப்பு நடைபெற்றது.

யாழ்ப்பாணம் மாவட்ட நீதிபதி ஜனப் இஸ்மாயில் பதில் மாவட்ட நீதிபதி திரு ஆர் பரமகுரு. பருத்தித்துறை மாஜிஸ்திரேட் திரு கே விக்னராசா, பருத்தித்துறை மாவட்ட நீதிபதி திரு வி வைத்திலிங்கம், மல்லாகம் மாஜிஸ்திரேட் திரு. வி எஸ் ஆனந்தகுமாரசாமி யாழ்ப்பாணம் மாஜிஸ்திரேட் ஏ எஸ் ஜே டயஸ் ஆகியோரும், மற்றும் வழக்கறிஞர்கள் பொலிஸ் அதிகாரிகள் டாக்டர்கள் வந்திருந்தனர்.

முடிக்குரிய வழக்கறிஞர் திரு குமார் அமரசேகரா விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவிருக்கும் வழக்குகளின் எதிரிகளுக்கு அரசாங்கத்தால் நிரமிக்கப்படும், வழக்கறிஞர்களின் பெயர்களை அறிவித்தார்.

11 வழக்குகள் விசாரணை செய்யப்படவிருக்கின்றன. நேற்று முதல் வழக்காக குப்பிளான் கைமோசக் கொலை வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப் பட்டது.

# இறந்தவரின் மனைவிக்கு 400 ரூபா கட்டவேண்டும்

யாழ்ப்பாணம், திங்கள்

குப்பிளான் கைமோசக் கொலை வழக்கில் எதிரி 500 ரூபா பொறுப்பில் 2 வருட நன்னடத்தைப் பிணையில் செல்ல அனுமதிக்கப்பட்டார். அரசாங்க செலவாக எதிரி 100 ரூபா கட்ட வேண்டுமென்றும் இறந்தவரின் மனைவிக்கு 400 ரூபா கட்ட வேண்டுமென்றும் கட்டத் தவறினுல் 1 வருட சிறைத்தண்டனை விதிக்கப்படுமென்றும் நீதியரசர் தீர்ப்பளிக்கையில் தெரிவித்தார்.

இவ்வழக்கு நேற்றுக்காலை வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் நீதியரசர் ஏ. எல். எஸ். சிறிமானே முன்னிலையில் விசாரணை செய்யப்பட்டது.

இவ்வழக்கில் குப்பிளானில் 69-ம் ஆண்டு செப்டம்பர் மாதம் 5-ம் தேதி சுப்பையா அருணசலம் என்பவர் இளையதம்பி ஆறுமுகம் என்பவரை கைமோசக் கொலை செய்ததாக குற்றம் சாட்டப்பட்டது.

எதிரி சார்பில் அட்வகேட் கே. வி. எஸ். சண்முகநாதன், புறக்டர் கே. குணரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானுர். முடிக்குரியதரப்பில் அட்வகேட் அபயசேகரா ஆஜரானுர்.

எதிரி காயம்விளைவித்த குற்றத்தை ஒப்புக்கொண்டதைத் தொடர்ந்து தீர்ப்பு வழங்கப்பட்டது 2பேர் பிணை நிற்கவேண்டுமென்றும் இரண்டு கிழமைக்குள் பிணைப் பணம் கட்டவேண்டுமென்றும் எதிரிக்கு தெரிவிக்கப் பட்டது.

அசைஸ் விசாரணை நாளை காலை வரை ஒத்திவைக்கப் பட்டது.

# உபதபால் அதிபர்களுக்கு வாடகைப் பணம் இல்லை

## சம்பளச்சபை அறிவிப்பு

யாழ்ப்பாணம், திங்கள்

இதுவரைகாலமும் உபதபால் அதிபர்களிடம் அறவிடப்பட்டுவந்த வாடகைப் பணம் இனிமேல் அறவிடப் படமாட்டாது. இதுவரை அறவிட்ட பணமும் திருப்பி வழங்கப்படும். இத்தகவலை சம்பளச்சபைக் காரியதரிசி திரு. பி ஐ. குணதுங்கா அறிவித்துள்ளார்,

உபதபால் அதிபர்கள் தொழிற்சங்கங்களின் யூனியன் குறிப்பிட்ட வாடகைப்பணத்தை அறவிட வேண்டாம் என தபால் மா அதிகாரியிடம் கேட்டிருந்தது. இதுசம்பந்தமாக மேற்படி யூனியன் இணைச்செயலாளர் திரு. ஐ. நடராசாவுக்கு சம்பளச்சபைக்காரியதரிசி திரு. குணதுங்க அனுப்பிவைத்துள்ள கடிதமொன்றில் இனிமேல் வாடகைப்பணம் அறவிடப்படமாட்டாதென்றும், அறவிடப்பட்டதொகை சகல உபதபால் அதிபர்களுக்கும் திருப்பி வழங்கப்படுமென்றும் தெரிவித்துள்ளார்.

# கைத்தொழில் அபிவிருத்தி!

## அமைச்சு திட்டம்

கோட்டை, ஞாயிறு

பாரம்பரிய கைத்தொழில் சிறு கைத்தொழில், குடிசைக் கைத்தொழில்களை அபிவிருத்திசெய்ய கைத்தொழில் அபிவிருத்தித் திணைக்களம் முடிவுசெய்துள்ளது.

'லக்சல'வைச் சிறப்பான முறையில் செயல்படுத்தும் நோக்கமாகப் புதிய ஆலோசனைச் சபை ஒன்று நிறுவப்பட்டுள்ளது. இச்சபையின் தலைவராக ஆட்சிமன்ற உறுப்பினர் திருமதி சிவா ஒபயசேகரா நியமிக்கப்பட்டுள்ளார்.

'லக்சல'வில் வைக்கப்படும் காட்சிப்பொருட்கள், கைப்பணிப் பொருட்கள் ஆகியவற்றைச் சிறப்பான முறையில் செய்வதற்கு வேண்டிய ஆக்கபூர்வமான செயல்களை புரிவது இச்சபையின் முக்கிய கடமையாகும்.

வங்கியாளர் பயிற்சி வகுப்பு

# 'செப்டம்பரில் தமிழில் நடத்த ஒழுங்கு மேற்கொள்ளவும்'

கோட்டை, ஞாயிறு

வங்கியாளர் பயிற்சித் தேர்வை தமிழில் எடுக்க விரும்பும் வங்கி ஊழியர்களுக்கு ஏற்ற பாடக்குறிப்புகளை உடனடியாகத்தமிழில் பெயர்த்தும் வெளியிட ஏற்ற ஒழுங்குகளைச் செய்வது பெரிதும் வரவேற்கப்படுமென்று மத்திய வங்கி தமிழ் ஊழியர் சங்கச் செயலாளர் திரு. மா. க. கனகேந்திரன் வங்கியாளர் பயிற்சி நிலையச் செயலாளரைக் கடிதமூலம் கேட்டுள்ளார். பயிற்சி நிலைய நூல் நிலையத்தி[ல்] பாடநூல்களும் துணைநூல்களும் தமிழில் இடம் பெறவேண்டியதை கடிதம் வற்புறுத்தியுள்ளது.

அக்கடிதத்தில் மேலும் கூறப்பட்டிருப்பதாவது:-

''எமது வேண்டுகோளை ஏற்று வங்கியாளர்பயிற்சித் தேர்வுகளைத் தமிழில் நடாத்தியதற்கு எம் நன்றியைத் தெரிவிக்கும் அதே வேளையில் வங்கித்துறையில் பணியாற்றும்தமிழ் ஊழியர்களின் தேவைக்கு ஏற்பக் குறிப்பாக கொழும்பில் வதியும் ஊழியர்களின் தேவைக்கு ஏற்ப வங்கியாளர் பயிற்சி வகுப்புகளை வரும்செப்டம்பரில் தமிழில் நடத்த ஏற்ற ஒழுங்குகளைச் செய்யயுபி''.

''கூடியளவு எண்ணிக்கையுடைய தமிழ் ஊழியர்கள் கடந்த தேர்வை எடுக்கும் முறையில் கால தவணையும் விளம்பர முக்கியத்துவமும் போதியதாய் அமையவில்லை ஆதலால் இனி நடக்கவிருக்கும் தமிழ் வங்கியாளர் பயிற்சி வகுப்புகள் தேர்வுகள் ஆகியன பற்றி உரிய முக்கியத்துவம் கொடுத்து போதிய கால தவணையும் வழங்கி விளம்பரம் செய்யுமாறு வேண்டுகிறேம்''.

# ரஷ்ய கார்கள் இலங்கை வரும்

கோட்டை, ஞாயிறு

ரஷ்யாவுடன் செய்துகொண்ட ஒப்பந்தத்தையொட்டி, வர்த்தகரீதியில் ரஷ்யக் கார்கள் மிக விரைவில் இலங்கைக்கு வரவிருக்கின்றன.

வொல்கா, மொஸ்கோவிச் மாதிரிக் கார்களுக்கே விண்ணப்பம் செய்யப்பட்டது. (சி பி ஏ)

# இன்று

யாழ்ப்பாணம், திங்கள்

யாழ்கோட்டை முனிஸ்வரன் ஆலயத்தில் மணவாளக்கோல சங்காபிஷேகத்தின் பத்தாவது தினவிழா நடைபெறுகின்றது. பிரதி திருமும் மாலை 5 மணி தொடக்கம் 7 மணி வரை முனிஸ்வரப்பெருமானுக்கு விசேட ஸ்நாபனுபிஷேகமும் பூஜாராதனைகளும் நடைபெற்று வருகின்றன. இன்று தொடங்கி தொடர்ந்து பத்துத்தினங்களுக்கு திருத்தொண்டர்கூட்டம்என்னும் பொருள் பற்றி அருட்கவி திரு. சீ. விநாசித்தம்பி கதாப்பிரசங்கம் செய்வார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தேவை

**ஆசிரியர்:**
நீர்வேலி அத்தியார் இந்துக்கல்லூரிக்கு அருகாமையில் உள்ள போதனு நிலையத்திற்கு பௌதிக, இரசாயனம் ஆகிய பாடங்களுக்கு போதனுசிரியர் ஒருவர் தேவை. உடன் விண்ணப்பிக்கவும். 3166

யாழ்ப்பாணத்தில் வீடு, காணி, வயல்கள் தேவை. பணம் உடனே கொடுப்போம். எழுதுங்கள். வெஸ்டன் றேட்ஸ், த பால் பெட்டி-54, யாழ்ப்பாணம். 3145

## விற்பனைக்கு

யாழ்ப்பாணம் சுண்டிக்குழி கச்சேரி நல்லூர் வீதியில் செல்வமலர் என்ற பெயருடைய வீடும் காணியும் விற்பனைக்கு உண்டு. பிரபலமான கல்லூரிகள், கச்சேரிக்கு அண்மையிலுள்ளது. நாலு பரப்பு. அ. த. ஜெயசிங்கம், 5, முருகேசு ஒழுங்கை, நல்லூர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளவும். 3174

**நெற்காணி:**
சுருவிலில் இருக்கும் திறமான நெற்காணி (வெள்ளடைச்குளம்) பரப்பு 154 விற்பனைக்குண்டு. விரும்பியவர்கள் நேரில் சந்திக்கவும். செல்லம்மா அந்தோனிப்பிள்ளை, திருக்குன்றம், கரம்பன், ஊர்காவற்றுறை. 3176

## மரண அறிவித்தல்

அராலி கிழக்கைச் சேர்ந்த துரையம்மாச்சி நேற்று காலஞ் சென்றுவிட்டார். இவர் தையல்நாயகம், கனகாம்பிகை, கனகசபை ஆகியோரின் தாயாரும், சின்னத்தம்பியின் மாமியாரும், பரம் (பல்கலைக்கழக ஆஸ்பத்திரி, கோலாலம்பூர் வடிவம் (P. W. D. சிலங்கூர்) ஆகியோரின் பேத்தியாருமாவார். அன்னரின் ஈமக்கிரியைகள் இன்று (13-7-70) திங்கட்கிழமை அராலி கிழக்கில் நடைபெறும். தகவல்: கனகசபை. 3178

## விற்பனைக்கு

1 Sri NSU Prima ஸ்கூட்டர், 16'' Hero சயிக்கிள். லோகேஸ்வரன், 42/4, நீராவியடி ஒழுங்கை, கொலிச் ரோட், யாழ்ப்பாணம், தொலைபேசி 449 3177

## உலக இரட்சகர் திருநாள்

வல்வெட்டித்துறை, ஞாயிறு
பருத்தித்துறை பங்கு விசாரணையைச் சேர்ந்த உடுப்பிட்டி உலக இரட்சகர் திருநாள் இம்மாதம் 9ம் திகதி தொடக்கம் நடைபெற்று வருகிறது. 17-ந் திகதிவரை இதுதொடர்ந்து நடைபெறும்.

## அச்சு இயந்திரம் தேவை

13 18 அங்குலத்தில் பிளேட்டன் மெசின் மூன்றும், 30 அங்குலத்தில் தாள் வெட்டும் இயந்திரமொன்றும் நல்ல நிலையில் தேவை. விலை விபரம் அறிவிக்கவும்.

Proprietor:
M. G. M. PRINTING INDUSTRIES,
257, DAM STREET,
COLOMBO - 12

2357

## ராஜா - யாழ்ப்பாணம்

தினசரி 3 காட்சிகள் பிரிபோயா, போயா 4 காட்சிகள்
காந்தராவ், ராஜ்ஸ்ரீ, ஜெயந்தி
நடித்த
# மாவீரன் ஜெயசீலன்
(சண்டைகள் நிறைந்த ஒப்பற்ற திரை ஓவியம்)

ராணி (யாழ்ப்பாணம்) ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ் — ஜெயந்தி நடித்த

## அறிவித்தல்

நவாலி கலையோடை நாகதம்பிரான் கோயிலில் இன்று (13-7-70) திங்கட்கிழமை பிற்பகல் 3 மணி முதல் விசேட சங்காபிஷேகமும் பூசையும், திருஊஞ்சல் உற்சவமும் நடைபெறும். இவ்விழாவில் அளவையூர் நாதஸ்வர மேதை S. S. சிதம்பரநாதன் கோஷ்டியினரின் மேளக்கச்சேரியும் இடம்பெறும். 2361

## மானிப்பாய் பட்டின சபை
## கேள்வி விளம்பரம்

1970-ம் ஆண்டு ஆடி மாதம் 23-ந் திகதி வியாழக்கிழமை முற்பகல் 9-30 மணி வரை மானிப்பாய் பட்டினசபை, விளையாட்டு மைதானத்திற்கு கம்பி வேலி அமைப்பதற்கு மானிப்பாய் பட்டினசபை அக்கிராசனரால் அரக்கு முத்திரையிடப்பட்ட கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும்.

பட்டினசபையில் பதிவு செய்யப்பட்ட கொந்திராத்துக்காரர்களின் கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும். கேள்விப்பத்திரப்பணம் ரூபா 10/- கட்டுப்பணமாக ரூபா 50/- செலுத்தி கேள்விப்பத்திரங்கள் பெற்றுக்கொள்ளவேண்டும். கேள்விப்பத்திரப்பணம் திருப்பிக் கொடுக்கப்படமாட்டாது. மேலதிக விபரங்களை காரியாலய நேரங்களில் அறிந்து கொள்ளலாம்.

சி. இராசேந்திரம் ஜே. பி.,
தலைவர்,
பட்டினசபை,
மானிப்பாய்
பட்டினசபை அலுவலகம்,
மானிப்பாய்,
9-7-70. 2362

## இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம்
### திங்கள் 13—7—70

(செய்திகள்: காலை 7 00, பகல் 12-45, மாலை 6-15, இரவு 9 00)

**844 மீ. அன்ட் 61 மீ.**

காலை 6-15 நாதாஞ்சலி, 6-25 சைவநற்சிந்தனை, 6-30 கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 பாட்டு, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

**844 மீ. அன்ட் 49 மீ.**

பகல் 12-00 சித்திர

## கேள்வி அறிவித்தல்

பாஷையூர், கொழும்புத்துறை நாவாந்துறை ஆகிய இடங்களில் கரையோரங்களில் குவிக்கப்பெற்ற குப்பையைக் கடலுள் தள்ளுவதற்குத் துடுப்பு விருண்டி முன் இணைத்த 'ட்ராக்ரர்' வாடகைக்குவிட விரும்புவோரிடமிருந்து முத்திரையிடப்பெற்ற விண்ணப்பங்கள் பிரதியுடன் ஏற்றுக் கொள்ளப்படும்.

மேற்குறித்த இடங்களிலுள்ள குப்பையை கடலுள் தள்ள துடுப்பு முன் இணைந்த 'ட்ராக்ரர்' மணித்தியாலத்திற்கு வாடகை என்ன என்பதை ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தமது விண்ணப்பத்தில் குறிக்கவேண்டும்.

யா/ மாநகரசபை மராமத்து பொறியியலாளரிடம் மேலதிக விபரம் அறியலாம்.

கேள்விகள் 28-7-70 நண்பகல் 12 மணிக்கு முன் கிடைக்கவேண்டும்.

ஏ. ரி. சுந்தரம்,
ஆணையாளர்.
நகராண்மைக் கழகம்.
மாநகர சபை,
அலுவலகம்,
யாழ்ப்பாணம்.
9-7-70 2364

## பெற்றோர்-ஆசிரிய சங்க நிர்வாகிகள்

பருத்தித்துறை, ஞாயிறு
வடமராட்சி இந்துமகளிர் கல்லூரி பெற்றோர் ஆசிரியர் சங்கஉத்தியோகத்தர்களாக பின்வருவோர் தெரிவுசெய்யப்பட்டனர்.

தலைவர் செல்வி. கே. சரவணமுத்து (அதிபர்) உபதலைவர்கள்: திரு. டி. பாலசுப்பிரமணியம். திரு. என். சுப்பிரமணியம், திருமதி பீ ஸ்ரீ பத்மநாதன், இணைச்செயலாளர்கள்: திருவாளர்கள் எம். இராமகிருஷ்ணன், எஸ் வேல்முருகு. பொருளாளர்: திருமதி எல். குமாரசாமி, உதவிப்பொருளாளர்: திருமதி வீ குலதுங்கம். பதினேழு பேர் கொண்ட ஒரு செயற்குழுவும் தெரிவுசெய்யப்பட்டது.

## 2-ம் வருட மாணவர் வெற்றி

யாழ்ப்பாணம், திங்கள்
பலாலி கனிட்ட பல்கலைக்கழக முதல் வருட மாணவர்கட்கும் இரண்டாம் வருட மாணவர்கட்குமிடையில் ... சினேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாம் வருட மாணவர்கள் 3-0 கோல்கனால் வெற்றி பெற்றனர். பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விளையாட்டரங்கில் நடை

காரைநகர்

## கனிஷ்ட வித்தியாலயங்களின் மெய்வல்லுநர் போட்டி

காரைநகர், ஞாயிறு
காரைநகர் கனிஷ்ட வித்தியாலய மெய்வல்லுநர் போட்டிகள் இம்மாதம் 17-ம் திகதி பிற்பகல் ஆரம்பமாகி நடைபெறவிருக்கின்றன. காரைநகரைச்சேர்ந்த சகல கனிஷ்ட பாடசாலைகளிலிருந்தும் மொத்தம் 450 மாணவர்கள் கலந்து கொள்ளும் இப் போட்டியில் வட்டுக்கோட்டைத் தொகுதி வித்தியாதரிசி திரு. ப. சச்சிதானந்தம் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்வார். போட்டி ஏற்பாடுகளை காரைநகர் போட்டி சபைக்காரியதரிசி ஒழுங்கு செய்துள்ளார்.

பருத்தித்துறை வட்டார

## தமிழ்த்திறன் போட்டி முடிவுகள்

வல்வெட்டித்துறை, ஞாயி
பருத்தித்துறை வட்டாரப் பாடசாலைகளின் தமிழ்மொழித் திறன் போட்டி முடிவுகள் பின்வருமாறு:

**அ பிரிவு:**

பிரதிபண்ணல்: சு நந்தகுமார், பருத்தி சித்திவிநாயகர் வித்தியாசாலை, ப கோமதி, குடத்தனை, அ த க பாடசாலை. க மு சிவலிங்கம், தட்டாதெரு மெ மி த க பாடசாலை

உரத்துவாசித்தல்: சு கிருஷ்ணவேணி, கலட்டி றோ க த க பாடசாலை, செ செல்வமலர், மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, கு சந்திரகௌரி தும்பளை சைவப்பிரகாச வித்தியாசாலை.

பா ஓதல்: ச கௌரிலட்சுமி, பொலிகண்டி சைவ த க பாடசாலை ம குயின்ரஸ் கலட்டி றோ க த க பாடசாலை, லே யூலியற், தாழையடி றோ க த க பாடசாலை.

**ஆ- பிரிவு-**

சொல்வதெழுதல்: ம எட்வீசம்மா, சென்ற் தோமஸ் றோ க பெண் பாடசாலை, பூ சாந்தினிதேவி. புலோலி கிழக்கு அரசினர் த க பாடசாலை, சே ஞானவதி, வல்வெட்டித்துறை அ மி த க பாடசாலை.

உரத்துவாசித்தல்: ச நளினி, பொலிகண்டி சைவ த க பாடசாலை. இ சிறீதரன், அல்வாய் வடக்கு றோ க த பாடசாலை, மா நடராசமணி, மருதங்கேணி சைவ த க பாடசாலை.

சொற்பொழிவு: செ இராதை, வல்வை சிவகுரு வித்தியாசாலை. அ லீலா மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, செ ...வதி வல்வெட்டித்துறை அ மி த க பாடசாலை.

பாஓதல்: கி அமிர்தானந்தசிவம் கொற்றுவத்தை அ மி த க பாடசாலை, வே இராஜேஸ்வரி, வல்வை சிவகுரு வித்தியாசாலை, செ யோகராசா, மாதனை மெ மி த க பாடசாலை

**இ- பிரிவு**

சொல்வதெழுதல்: சி வரதராசா வல்வை சிவகுரு வித்தியாசாலை, க நந்தகோபால், திக்கம் சித்திவிநாயகர்வித்தியாசாலை, மு இராஜேஸ்வரி. பொலிகண்டி, சைவ த க பாடசாலை.

கட்டுரை: தா கௌரி, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, வை அமிர்தலிங்கம் வல்வை றோ க த க பாடசாலை, க விக்கினேஸ்வரன், அம்பன் அ மி த க பாடசாலை.

சொற்பொழிவு: த இரமணி மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, மு இராஜேஸ்வரி பொலிகண்டி சைரவ த க பாடசாலை, த யோகநாதன் தட்டாதெரு மெ மி த க பாடசாலை.

பா ஓதல்: இ கஜலட்சுமி, மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, வே பாக்கியநாதன், பொலிகண்டி சைவ த க பாடசாலை, செ கலாவதி, வல்வை அ மி த க பாடசாலை.

நாடகம்: 'ஒரு துளி இரத்தம்' செம்பியன்பற்று றோ க த க பாடசாலை, 'சத்தியமே வெல்லும்' மெதடிஸ்த பெண்கள் உயர்தர பாடசாலை, 'தாய் பெற்ற வரம்' மாதனை மெ மி த க பாடசாலை

## சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், ...கள்
இலங்கை இந்துசம... பரி

## நாட்டைக் காக்கும் நிதி

செட்டிக்குளம், ஞாயிறு
செட்டிக்குளம் காரியாதிகாரி கந்தோரில் கடமை

சினிமா விமர்சனம்

## பால் மனம்

ஏழைப்பட்டதாரியான சுந்தரத்தை, செல்வந்தரின் மகளான டாக்டர் சாந்தா காதலிக்கிறார். மகளை ஒரு நல்ல இடத்தில் சம்பந்தம் செய்ய வேண்டுமென விரும்பும் செல்வந்தர் சாந்தாவை மறந்துவிடும்படி சுந்தரத்தை வேண்டுகிறார். அதே சமயம் அத்தை மகளான மல்லிகாவையே மணக்கும்படி தாயார் சுந்தரத்திடம் கூறுகிறார். இந்த நிலையில் இளகிய மனம்படைத்த சுந்தரம் மல்லிகாவையே மணம்முடிக்கத் தீர்மானித்துவிடுகிறான். ஏமாற்றமடைந்த டாக்டர் சாந்தா திருமணத்தைவெறுத்து கடமையில் கண்ணுயிருக்கிறார். மல்லிகாவுக்கு மூர்த்தி என்பவருடன் தொடர்பு இருந்ததாக அறிந்த சுந்தரம், அவளை தன் வீட்டில் கொண்டுவந்து ஆதரிக்கிறார். அவளுக்கு ஒரு ஆண் குழந்தை பிறக்கிறது. சொத்துக்குவாரிசான மூர்த்தியை தனது மருமகனுக்க திட்டம்போட்டு வருகிறார். இப்படியாக கதைமுழுவதும் கடைசிவரை ஒரே சிக்கலாக செல்வதுதான் 'பால்மனம்'

சுந்தரமாகவரும் ஜெய்சங்கரின் நடிப்பில் முன்னேற்றம் காணப்படுகிறது. அப்பாவியாக மிகவும் திறமையாக நடித்திருக்கிறார் சாந்தாவாக வரும் விஜயாவுடன் காதல்காட்சிகளில் மிகவும் நெருக்கமாக நடிக்கின்றார். விஜயா வழக்கம்போல் ஆடிப்பாடி நடித்திருக்கிறார், மல்லிகாவாக வரும் மணிமாலா கொடுத்தபாகத்தை திறமையுடன் நடித்திருக்கிறார். சோகக்கட்டங்களில் பாராட்டைப் பெறுகிறார். மூர்த்தியாகவரும் அசோகன் வழக்கமான வில்லன் பார்வையுடன் வந்தாலும், வழக்கமான நடிப்பை காணமுடியவில்லை. சண்டைக்காட்சிகளில் ஜெய்சங்கரும் அசோகனும் நன்கு மோதுகின்றனர். சண்டைக்காட்சிகள் விறுவிறுப்பாக செல்வதால், சண்டைப்பிரியர்களுக்கு நல்லவிருந்தாக இருக்கிறது. செல்வந்தராகவரும் சுந்தரராஜன் வழக்கமான நடிப்பு. நாகேசும், மனோரமாவும், நகைச்சுவை கதையோடு ஒட்டியிருந்தாலும் அவ்வளவு எடுப்பாக இல்லை. நகேஷ் வழக்கமான நகைச்சுவைகளை வெடிக்கிறார். பாடல்கள் சில நினைவில் நிற்கின்றன.

கே எஸ் சேதுமாதவன் டைரக்ஷனில் தயாராகியிருக்கும் இப்படம் தற்பொழுது யாழ். வின்சர் திரையில் காட்சியளிக்கிறது. குடும்பத்துடன் சென்று பார்த்துமகிழக்கூடிய படம்.

—யோகி

## 'குடும்ப நலத்திட்டத்தை அனுசரியுங்கள்'

உடும்பராய், சனி
குடும்ப நலத் திட்ட முறையை நாம் அநுசரிப்பது மிகவும் நல்லது. அதிக பிள்ளைகளை அடிக்கடி பெற்றுப் பலர் வறுமையில் வாடி மிகவும் கஷ்டப்படுகின்றனர். குறைந்த பிள்ளைகளைப் பெறுவதினால் தாயானவள் உடல் நலம் உள்ளவளாய் இருப்பதுடன் குடும்பத்தையும் நன்கு பராமரிக்க முடிகிறது. குடும்ப நலத் திட்டத்துக்குரிய வைத்திய முறைகளை வைத்தியர்களின் ஆலோசனையின்படி கையாளுவது பெரும் பயன்தரும்' குடும்பநலத் திட்டம் சம்பந்தமாக உடும்பராய் சைவத்தமிழ் வித்தியாசாலையில் நடைபெற்ற கூட்டத்தில் பேசிய குடும்பநலத் திட்ட யாழ் கிளை வைத்தியப் பொறுப்பாளர் டாக்டர் திருமதி. சுந்தரலிங்கம் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

டாக்டர் க. சிவஞானரத்தினம் தலைமையில் நடைபெற்ற இக் கூட்டத்தில் குடும்ப நலத்திட்டம் சம்பந்தமாக சபையோரால் எழுப்பப்பட்ட சந்தேக வினாக்களுக்கு டாக்டர் திருமதி. சுந்தரலிங்கமும் டாக்டர் திரு. க. சிவஞானமும் பதிலளித்துப் பேசினர். திருமதி. அருணாசலமும் உரையாற்றினார்.

## 'ஒவ்வொருவரும் தமது மதத்தை நேசிக்கவேண்டும்'

பண்டத்தரிப்பு, ஞாயிறு
'பாடசாலை வாழ்வில்பெற்றோர்தினம் ஒரு முக்கியத்து

## ஆண்டுவிழா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

(சண்டைகள் நிறைந்த ஒப்பற்ற திரை ஓவியம்)

ராணி (யாழ்ப்பாணம்) தினசரி 3 காட்சிகள்
ஜெமினி — சௌகார்ஜானகி நாகேஷ்— ஜெயந்தி நடித்த
இரு கோடுகள்

வின்ஸர் — யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
★ ஜெய்சங்கர்
★ விஜயா ★ நாகேஷ்
நடித்த
பால்மனம்

இப்பொழுது திரையிடப்படுகிறது
வெலிங்டன் யாழ்ப்பாணம்
தினசரி பி. ப 2-30, மாலை 6-30, இரவு 9-30 மணி
(போயா, பிரிப்போயா காலை 10-30)
எம்.ஜி.ஆர். ஜெயலலிதா
நாகேஷ் ரெங்கராவ்
மற்றும் பலர் நடித்த





கத்தோலிக்கநற்சிந்தனை, 6-35 மெல்லிசை, 7-30 திரைகானம், 8-00 பாட்டு, 8-15 இஸ்லாமிய கீதங்கள்.

844 மீ. அன்ட் 49 மீ.

பகல் 12-00 சித்திர கானம், 1-00 மாதர்கேட்டவை.

344 மீ. அன்ட் 61 மீ.

மாலை 4-25 கல்வி ஒலிபரப்பு, 5-00 பிறந்ததின வாழ்த்துக்கள், 5-30 இளைஞர் கண்டுபிடிப்புகள்.

இரவு 6-00 பாமாலை, 7-00 திரைகானம், 7-15 புல்லாங்குழல், 7-45 பேச்சு, 8-00 முஸ்லிம் நிகழ்ச்சி 9-30 கலைக்கோலம், 10-00 நேயர்கேட்டவை, 10-30 செய்தித்தொகுப்பு.

## பயணமானுர்

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணைக் கிராமத்தைச் சேர்ந்த செல்வன் மு பரமநாதன் எயர்கிராப் எஞ்சினியஸ் நிறுவனத்தில் கடமைபுரிவதற்காக இம்மாதம் 6ந் திகதி கட்டுநாயக்கா விமான நிலையத்திலிருந்து சிங்கப்பூருக்கு பயணமானுர்.


2வது வாரம்!
வெஸ்லிசினிமா
மானிப்பாய்
தினசரி: 6-30,10-00
பிரிபோயா,போயா 2-30மணி
ரவிச்சந்திரன் - ஜெயலலிதா
நடித்த
பணக்கார பிள்ளை
(புதிய வெளியீடு!)

ஸ்ரீ காலிங்கன்
இணுவில்
தினசரி 6-30,9-30மணி
போயா, பிரிபோயா 2-30
எம் ஜி. ஆர். — பத்மினி
நடித்த
மன்னுதி மன்னன்

REGAL JAFFNA
Daily 4-45, 7 & 9-45 P.M.
Poya-Pre. Poya 10.30 a.m.
Rod Taylor, Lilly Palmer
in
NOBODY RUNS FOREVER

MANOHARA JAFFNA
Daily 4-45, 7-00 & 9-45 p m
Robert Wagner
in
DEANLY ROLETTE


உதைபந்தாட்டப் போட்டியில் இரண்டாம் வருட மாணவர்கள் 3-0 கோல்கள் வெற்றி பெற்றனர். பலாலி ஆசிரிய பயிற்சிக் கலாசாலை விளையாட்டரங்கில் நடைபெற்ற இவ்விளையாட்டுப் போட்டிக்கு திரு. மறே மத்தியஸ்தம் வகித்தார்.

## விளையாட்டுப் போட்டி

மீசாலை, ஞாயிறு

மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலய இல்ல விளையாட்டுப் போட்டி வருகிற 14ம் திகதி பி ப 2 30 மணிக்கு நடைபெற விருக்கிறது. சாவகச்சேரி எம். பி. திரு. வி. என். நவரத்தினம் தலைமையில் நடைபெறும் விழாவில் வட மாநில கல்வி அதிபதி திரு வெ சங்கரலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்ளுவார். திருமதி இ நவரத்தினம் வெற்றி பெற்றேருக்குப் பரிசில்களை வழங்குவார்.

## வருடாந்த இல்ல விளையாட்டுப் போட்டி

மாவிட்டபுரம், ஞாயிறு

காங்கேசன்துறை நடேஸ்வராக்கல்லூரி வருடாந்த விளையாட்டு விழாவில் பாரதி இல்லம் முதலிடம் பெற்று இவ்வருட சாம்பியனுகியது.

காங்கேசன்துறை நடேஸ்வராக் கல்லூரி வருடாந்த விளையாட்டு விழா கடந்த இரு தினங்களாக கல்லூரி விளையாட்டரங்கில் நடைபெற்றது.

கல்லூரி அதிபர் திரு கே. சிவப்பிரகாசம் தலைமையில் நடந்த இவ்விழாவின் முதல் நாள் நிகழ்ச்சிக்கு வைத்திய அதிகாரி. திரு. மாணிக்கமும், இரண்டாம் நாள் நிகழ்ச்சிக்கு காங்கேசன் துறை பட்டினசபைத் தலைவர் திரு. க, ஜெயபாலசிங்கமும் பிரதம அதிதிகளாக கலந்து கொண்டனர்.

## இணுவில் வெற்றி

சங்கானை, ஞாயிறு

இணுவில்ஸ்ரீகணேசா விளையாட்டுக் கழகத்திற்கும் வண்ணார்பண்ணை கலாஜோதி விளையாட்டுக் கழகத்திற்குமிடையே நடைபெற்ற சிநேகபூர்வமான உதைபந்தாட்டப் போட்டியில் கணேசா விளையாட்டுக் கழகம் 8-14, 3-14 10-14 புள்ளிகளால வெற்றியீட்டியது. நடுவராக திரு எஸ் நவரத்தினம் கடமையாற்றினுர்.

வதி வல்வெட்டித்துறை அமிதக பாடசாலை.

## சங்க நிர்வாகிகள்

யாழ்ப்பாணம், [illegible]கள்

இலங்கை இந்துசமய பரிபாலன பிரசார சபையின் புதுவருட உத்தியோகஸ்தர்கள் தெரிவு:-

காவலர் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாதத் தம்பிரான் சுவாமிகள், போஷகர்-திரு. செ. தனபாலசிங்கம், உபபோஷகர்கள்-திரு எஸ். வைத்திலிங்கம், திரு எஸ் கனகரெத்தினம், முதலியார் செ முத்துத்தம்பி, உபதலைவர்கள் வித்துவான் க கணபதிப்பிள்ளை, வித்துவான் பொன் கந்தசாமி, வித்துவான் க நவரத்தினக்குருக்கள் பொருளாளர் திரு. நா சோமசுந்தரம், திரு. மா. செந்தில்நாதன். பிரசார இயக்குநர்கள் - தமிழ்மணி சி. கணேசசுந்தரம், பண்டிதை ச அமிர்தவல்லி, பண்டிதர் இரா சிவசுப்பிரமணியம், திரு அருள் தியாகராசா, வித்துவான் க இ நடராசன். ஆலோசகர்கள் -கலாநிதி கைலாசநாதக் குருக்கள் திரு த குமாரசுவாமிப்புலவர், திரு. முருகசர்மா, திரு ம ஸ்ரீகாந்தா. நிர்வாகிகள் திருவாளர்கள் ஐ கனகசபாபதி, கு வி மகாலிங்கம், க கெங்காதரன், பி. சிவபாதம் பி இராஜேந்திரா, எச் வீரசிங்கம், வை சத்திகுமார், கு விநோதன்.

0 0 0

கோட்டை, ஞாயிறு

அரசாங்க எழுதுவினைஞர் சங்க கணக்காய்வுத் திணைக்களக் கிளையின் வருடாந்தப் பொதுக்கூட்டத்தில் பின்வருவோர் புதுவருட நிர்வாகிகளாகத் தெரிவுசெய்யப்பட்டனர்:

தலைவர் வே ஆறுமுகம், துணைத் தலைவர்கள் எஸ் எஸ். கந்தசாமி, திரு க குமரகுரு செயலாளர் திரு வீரவேலாயுதன் துணைச் செயலாளர் பொ சுந்தரலிங்கம், பொருளாளர் செ. குகதாசன், 7 பேர்கொண்ட நிர்வாகக் குழுவும் தெரிவு செய்யப்பட்டது.

0 0 0

வட்டுக்கோட்டை, ஞாயிறு

அண்மையில் வட்டுக்கோட்டையில் அங்குரார்ப்பணம் செய்துவைக்கப்பட்ட முற்போக்கு வாலிபர் சங்க உத்தியோகத்தர்கள் விபரம் வருமாறு:-

தலைவர் ஹெ ஜோ கனகசபை, உபதலைவர்கள் சோநாதன், இ கு சிவஞானம், இணைக்காரிய தரிசிகள் சி திரு செல்வம், சு பத்மநாதன், பொருளாளர் வி ஏகாம்பரமூர்த்தி.

## நாட்டைக் காக்கும் நிதி

செட்டிக்குளம், ஞாயிறு

செட்டிக்குளம் காரியாதிகாரி கந்தோரில் கடமையாற்றும், காரியாதிகாரியுட்பட சகல உத்தியோகஸ்தர்களும் நாட்டைக்காக்கும் நிதிக்கு தங்களுடைய ஒரு நாள் சம்பளத்தை மனமுவந்து வழங்கியுள்ளார்கள்.

## இன்றைய பலன்

ஆனி மாதம்29-ம் திகதி [13-7-70]

மேஷம்- புதுமையயான எண்ணங்களால் உந்தப்படுவீர்கள். உடலில் தனி உற்சாகம் பிறக்கும்.

ரிஷிபம்- ஆரம்ப சூரத்தனம் ஆபத்தில் முடியலாம் பூமிப்பிணக்கால் நஷ்டத்திற்கிடமுண்டு

மிதுனம்- மற்றவர்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமாமாவீர்கள். பெரிய மனிதர்களின் உறவு தாராளமாகக் கிடைக்கும்.

கடகம்- உத்தியோக உயர்வுக்கிடமுண்டு. சிலருக்கு புதிதாகத் தொழில் வாய்ப்புக்கு இடமுண்டு,

சிங்கம்- அஷ்டகரமான தினம். சிலர் வாழ்க்கையில் திடீர் வரவுகளுக்கு இடம் உண்டு.

கன்னி- தானிய விருத்தியில் எதிர்பாராத நஷ்டம் ஏற்படலாம். விவசாயிகள் பாதிக்கப்படுவார்கள்

துலாம்- பிள்ளைகளின் தெல்லைகள் கவலையைத் தரும். பிறருடன் பகைத்துக்கொள்ளவும் நேரிடும்.

விருச்சிகம்- அதிகாரப் பேறுக்கும் அதிகபொருள் வரவுக்கும் இடமுண்டு ஆக்கப்பணிகளில் ஈடுபடுவீர்கள்

தனு- எதிர்பார்த்த வேதனம் இடையில் தடைப்படலாம். சிலர் வாழ்க்கையில் கடன் தொல்லையும் அதிகரிக்கும்

மகரம்- வாகனம் செலுத்துவோருக்கு இன்று நன்மதிப்புக்கிடைக்கும். தாய் வழித் தனவரவுக்கும் இடமுண்டு.

கும்பம்- மகிழ்ச்சிகரமான தினம். குடும்பத்தில் விருந்தினர்கள் வருகையால் கலகலப்பு ஏற்படும்.

மீனம்- துன்பத்தின் நிழலாட்டம் உங்களைத் தொடரும். புதிய முதலீட்டை இன்று தவிர்த்துக்கொள்ளவும்

சோதிடக்கலாநிதி
திருமலை
க. வேலுப்பிள்ளை

## 'ஒவ்வொருவரும் தமது மதத்தை நேசிக்கவேண்டும்'

பண்டத்தரிப்பு, ஞாயிறு

'பாடசாலை வாழ்வில்பெற்றேர்தினம் ஒரு முக்கியத்துவம் வாய்ந்த நாளாகும் பெற்றேர் தம் பிள்ளைகளின் திறமைகளைக் கண்டின்புறும் நாளும் இதுவே. ஆத்மீக கல்வியும் மாணவர்க்கு அவசியம் தன்னை மறந்து ஏனையவர்க்கு உதவும் பண்பை மாணவர் மனதில் கொள்ள வேண்டும்' என இளவாலை மகாவித்தியாலய பரிசளிப்பின்போது பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பிரான்ஸ் போர்டோ நகரைச் சேர்ந்த திருக்குடும்ப அதிசிரேஷ்டரின் பிரதிநிதி சங். சகோதரி ஸ்ரெலா ஐகாட் பேசுகையில் குறிப்பிட்டார். இங்குள்ளவர்கள் எச்சமயத்தைச் சார்ந்தவராயினும் அவர்கள் தமது சமயத்தை நேசிக்க வேண்டும் என்ருர்.

கலைநிகழ்ச்சிகளும் நாடகமும் இடம்பெற்றன.

## ஆண்டுவிழா

யாழ்ப்பாணம், திங்கள்

''மாணவர்களிடையே தொழில்நுட்பம் கற்கின்ற மனப்பான்மை இன்று வளர்ந்துவருகின்றது. பரீட்சைகளிலும் தொழில்நுட்ப அறிவும்அனுபவமுமே எதிர்கால சந்ததியினரை உயர்த்தும் தன்மையுடையன.''

இவ்வாறு யாழ்ப்பாணம் தொழில்நுட்பக்கல்லூரியின் 11-வது ஆண்டு பரிசளிப்பு விழாவுக்குத் தலைமை தாங்கிய கல்லூரி அதிபர் திரு ஜெயசிங்கம் தெரிவித்தார். கல்லூரியின் துரிதமுன்னேற்றத்துக்கு காரணமான முன்னுள் அதிபர் திரு நாகலிங்கத்தையும் பாராட்டினுர். வடமாகாணக் கல்வி அதிபர் திரு. கே. சங்கரலிங்கம், திரு மகாதேவா, முன்னுள் அதிபர் நாகலிங்கம் ஆகியோரும் பேசினர்.


KALANILAYA CAMBRIC
கலாநிலய கேம்பிறிக்
WRITING PADS
'லெற்றர் பாட்ஸ்'
நீல, வெள்ளைத் தாள்களில்
கோடிட்ட, கோடிடாத
பெரிய, சிறிய அளவுகளில்
விற்பனைக்குண்டு
மொத்த விற்பனைக்கு தொடர்புகொள்க:
'ஈழநாடு'
(வர்த்தக அச்சகப் பகுதி)
55, சிவன்கோவில் மேற்கு வீதி — யாழ்ப்பாணம்.

சில்லறையாகக் கிடைக்கும் இடம்:-
யாழ்ப்பாண
ஐக்கிய வியாபாரச் சங்கம்
420, ஆஸ்பத்திரி வீதி யாழ்ப்பாணம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 'பாடசாலை வாழ்க்கையில் பல பண்புகள் கற்கமுடியும்'

முசலி, ஞாயிறு

''ஒருகுழந்தையானது தனது பள்ளிவாழ்க்கையிலே பலவிதமான பண்புகளை படிக்க வேண்டியிருக்கின்றது ஒரு மாணவனோ, மாணவியோ, தனது பாடசாலை வாழ்க்கையில் தீய பழக்கங்களைப் பழகினால் பிற்காலத்தில் அவன் சமுதாயத்தில் தீய உள்ளமும், தீய பழக்கங்களும் கொண்டவனாக வாழ வண்டி ஏற்பட்டுவிடும்'' இதற்கு விளையாட்டில் மாணவர் கலந்துகொள்ளவேண்டியது அவசியம் விளையாட்டுகளில் மாணவர்கள் பங்குகொள்வதால்சேர்ந்துவாழவேண்டுமென்ற எண்ணம் மாணவரிடையே உதயமாகும்''

இவ்வாறு முசலி சிலாவத்துறை அல்-ஹிரு மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மெய்வல்லுனர் போட்டியின்போது மன்னார் மாவட்ட பிரதம கல்வி அதிகாரி திரு. ஆர். திருநாவுக்கரசு கூறினார்.

முசலி மகாவித்தியாலய அதிபர் ஜனாப் எம். ஐ. ஏ. சலாம், ஆசிரியர் ஜனாப் எச். எம். சரீப் ஆகியோரும்பேசினார்கள்,

இப்பாடசாலை ஆரம்பிக்கப்பட்டு ஏறக்குறைய ஐம்பது வருடங்களுக்கு பின்னர் இம்முறைதான் இங்கு மெய்வல்லுனர் போட்டி நடைபெற்றுள்ளது. மர்வா, ஷபா மினா என்ற இல்லங்களுக்கிடையே நடைபெற்ற போட்டியில் மினா இல்லம் அதிகப்படியான புள்ளிகளை பெற்று முதலிடத்தைப் பெற்றுக்கொண்டது.

## 'ஆசிரிய தொழிற்சங்கங்கள் வளர்ச்சியடையவில்லை'

உடுவில், ஞாயிறு

'கஷ்டங்களைக்கண்டு ஒடுபவர்கள்தொழிற்சங்க வாதியாக ஒருபோதும்முடியாது. இன்றைய மக்களரசாங்கம்தொழிற்சங்கங்களுக்கும் ஆசிரியர்களுக்கும்ஏற்றதாக இருக்கின்றமையால் ஆசிரிய உலகம் சிறப்படையும்.

இவ்வாறு வலி வடக்கு ஆசிரியர் சங்க வருடாந்தப் பொதுக் கூட்டத்தில் பேசிய திரு. ஏ. வைத்திலிங்கம் கூறினார். தொழிற்சங்கவாதிகளான திருவாளர்கள் சந்தியாப்பிள்ளை, சிவநேசன் ஆகியோருக்கு இக் கூட்டத்தில் வரவேற்பளிக்கப்பட்டது இவ்விரு ஆசிரியர்களும் தொழிற் சங்கத்தின் பெருமையைக் காப்பாற்றியுள்ளனர் என்று திரு. ஏ. வைத்திலிங்கம் சொன்னார்.

சங்கத்தலைவர் திரு. ஏ. மகாதேவன் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் திரு. ஆ. கல்யாணசுந்தரேசன் பேசுகையில்

எமது நாட்டில் ஏனைய தொழிற்சங்கங்கள் வளர்ச்சியடையவில்லை. ஜனநாயக நாடுகளில் எல்லாம் ஆசிரியர்கள் தம் உரிமையை நிலைநாட்டவேண்டி வேலைநிறுத்தம் போன்ற நடவடிக்கைகளில் கூட இறங்கியுள்ளனர் ஆனால் நம்மவர்கள அநீதியை எடுத்துக் கூறக்கூட முடியாதுமேலதிகாரிகளுக்கு அஞ்சிவாழ வேண்டியுளளது என்றார்.

சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகஸ்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்கே. கதிர்காமநாதன், காரியதரிசி திரு. எஸ். கந்தசாமி தனாதிகாரி திரு. எம் சின்னத்துரை.

## துப்பாக்கி வைத்திருந்தார் ரூபா 150 அபராதம்

மட்டுவில், ஞாயிறு

லைசன்ஸ் இல்லாத துப்பாக்கி வைத்திருந்த நபருக்கு சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா ரூபா 150அபராதம்விதித்து தீர்ப்பளித்தார்,

தாவளை இயற்றாளையைச் சேர்ந்த இராசையா, இராசையா சின்னம்மா ஆகிய இருவரும் தமது வீட்டில் லைசன்ஸ் இல்லாத ஒரு துப்பாக்கியை வைத்திருந்ததாக குற்றம் சாட்டி சாவகச்சேரி பொலிசாரால் தொடரப்பட்ட இவ்வழக்கை சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு. கே. விக்னராஜா விசாரணைக்கு எடுத்துக் கொண்டார் இரண்டாம் எதிரியான திருமதி சின்னம்மா இராசையாவை விடுதலை செய்து 1-ம் எதிரியான இராசையாவிற்கு ரூபா 150 அபராதம்செலுத்தும் படி நீதிபதி தீர்ப்பளித்தார்.

## வழிபடுவோர் சங்கம்

மாவிட்டபுரம், ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசாமி

## 'கூட்டுறவுஇயக்கங்கள்மூலம் சேமிக்க முன் வரவேண்டும்

வல்வெட்டித்துறை, ஞாயிறு

''அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களின் மூலம் நாட்டின் விவசாயம் கைத்தொழில் முதலியன வளர வேண்டும் என்ற நோக்குடன் மக்களுக்குபண உதவி செய்து வருகிறது. ஆனால் சில மக்கள் பெற்ற பண உதவியைநல்லமுறையில்உபயோகிக்காமலும் பெற்ற பண உதவியை திருப்பிக் கொடுக்காமலும் வருகிறார்கள். இதனால் கூட்டுறவுச் சங்கங்களும் நாடும் அபிவிருத்தி குன்றவேண்டிய நிலைமைக்கு தள்ளிவிடப் பார்க்கிறார்கள். மக்கள் எப்பொழுதும் சிக்கனமாக வாழ்ந்து கூட்டுறவு இயக்கங்கள் மூலம் சேமிக்கப் பழகி தமது பிற்காலத்திற்கும் பின் சந்ததியினருக்கும் உதவவேண்டும்''

இவ்வாறு யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திரு. ஜே. எம். சபாரத்தினம் புலோலி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாச சர்வதேச கூட்டுறவுத் தினவிழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும் போது தெரிவித்தார்.

புலோலி பலநோக்குக் கூட்டுறவு சங்க மண்டபத்தில் சமாசத் தலைவர் திரு. சு. குமாரசாமி தலைமையில் நடைபெற்றவிழாவில் யாழ். மாவட்ட அரசாங்க உதவி அதிபர் திரு. ரி. முருகேசம்பிள்ளை பேசுகையில் கூட்டுறவுச் சங்கங்களும், சமாசங்களும் உணவுப்பொருட்களை விற்பனை செய்யாமல்நாட்டு மக்களுக்கு தேவையான உடை, மற்றும் பொருட்களையும் விற்பனை செய்து வரவேண்டும் என்றார்.

உடுப்பிட்டி எம். பி. திரு. க. ஜெயக்கொடி, பருத்தித்துறை எம். பி. க. துரைரத்தினம், வடபகுதி ஐக்கிய மேற்பார்வைச் சபைத் தலைவர், திரு. ஆர். இராசரத்தினம், சிரேஷ்ட கூட்டுறவு உதவியாணையாளர் திரு. எஸ். பொன்னுத்துரை திரு. சோ. அருணகிரி ஆகியோரும் பேசினர்

வடமராட்சி இசைக்கலைப் பாடசாலை மாணவர்களால் இசைக்கச்சேரியும், திரு கே. என். கணபதிப்பிள்ளையின் வில்லுப்பாட்டும் இடம்பெற்றன.

## ''கல்விப்பணியே முதலில்''

யாழ்ப்பாணம், திங்கள்

''எதிர் காலப் பிரஜைக

## ஆலோசனைக் கூட்டம்

வேலணை, ஞாயிறு

ஊர்காவற்றுறைப் பகுதியில் ஏற்படும் வெள்ள அழிவு சம்பந்தமாக எடுக்க வேண்டிய நடவடிக்கை பற்றியும் இப்பகுதியில் கட்டாக்காலி மாடுகளால் ஏற்படும் சேதங்களைத் தவிர்ப்பதற்கு ஏற்ற நடவடிக்கை எடுப்பது பற்றியும் ஆராயும் பொருட்டு ஓர் ஆலோசனைக் கூட்டம் மேலதிக அரசாங்க அதிபர் தலைமையில் வேலணை சரஸ்வதி வித்தியாசாலையில் நாளை நடைபெறவுள்ளது

ஊர்காவற்றுறை ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினத்தின் வேண்டுகோளுக்கிணங்க நடைபெறும் இவ் ஆலோசனை கூட்டத்தின் போது தீவுப்பகுதி காரியாதிகாரி ஆட்சிமன்ற உறுப்பினர் கமத்தொழில் உத்தியோகத்தர்கள் கிராமச்சபைத் தலைவர்கள் முதலானோர் கலந்து கொள்கின்றனர்.

0 0 0

வேலணை, ஞாயிறு

தீவுப்பகுதிவள்ளச்சேவை திருப்தியாக நடைபெற வழிவகைகளை ஆராயும் பொருட்டு அரசாங்க அதிபர் தலைமையில் இம்மாதம் 16-ம் திகதி ஆலோசனைக் கூட்டம் நடைபெறவுள்ளது. தீவுப்பகுதியின் சகல கிராமச்சபைத் தலைவர்களும் ஆட்சிமன்ற உறுப்பினர் திரு. கா. பொ. இரத்தினம் உட்பட பலரும் இக்கூட்டத்தில் கலந்து கொள்வார்கள்.

## 'மக்கள் சேவையே தொ. சங்கத்தின் கடமை'

உடுப்பிட்டி, ஞாயிறு

பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ தொழிலாளரின் ஒத்துழைப்புடன் மேற்படி டிப்போவின் போக்குவரத்து வசதிகளை விஸ்தரிக்கவும், தொழிலாளர் பிரச்சினைகளை மனிதபிமானத்துடன் அணுகுமாறும் இ. போ. ச. தலைவரிடம் கேட்கவிருப்பதாக இலங்கைப் போக்குவரத்து தொழிலாளர் சங்கத்தின் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ ஊழியர்களின் வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கிய பிராந்திய பிரதிநிதி திரு. எஸ்.

# வீடுதோறும் ஒரு சிறு தொழில்; கிராமந்தோறும் விவசாயப்பண்ணை

## இந்தோசீனாவின் கதை பயங்கரமானதாம்

வாஷிங்டன், ஜூலை 12

'வியட்னாம் யுத்தம் ஒரு 'பெரிய பயங்கர கதை' என்று வெள்ளைமாளிகையில் தலைவர் நிக்சனைச் சந்திக்க முன்னர் புதிய செனட் செயலகத்தில் தமக்களிக்கப்பட்ட மதிய உணவின் போது ஐ நா. காரியதரிசி யுதாண்ட் வியட்னாம்பற்றிக் குறிப்பிடுகையில் கூறினார்.

இந்தோனேஷிய விவகாரம்பற்றி யுதாண்ட் குறிப்பிடுகையில் 'பௌத்தனாகிய எனக்கு 'மனித உயிர் தெய்வீகத்தன்மை வாய்ந்தது. இப்போர் மூலம் இறந்த, இறக்கும் ஒவ்வொரு அமெரிக்கனும் வியட்னாமியனும் எனது சகோதரர். என்னால் அமெரிக்கன், கம்போடியன், வியட்னாமியன், யூதன் என்று பாகுபாடுபடுத்தவோ அவர்களுக்குள் வேறுபாடு காட்டவோ முடியாது. அவர்களுக்குள் வித்தியாசமுமில்லை என்றார்.

இதுவரை எழுதப்பட்டுள்ள பயங்கரக் கதைகள் எல்லாவற்றிலும் பார்க்க இந்தோசினத்தின் கதை பயங்கரமானதொரு கதையென்றே கருதுகிறேன். ஆகவேதான் நான் கடந்த ஆறு வருடங்களாக இந்தப் போரை நிறுத்த வேண்டுமெனக் கூறி வருகிறேன் என்றும் அவர் கூறினார்.

## திரு.கிரியின் சுலோகம்

சென்னை ஜூலை 12

'மக்கள் வாழ்க்கை வசதிக்கென அரசியல் அமைப்பில் சில அம்சங்களிருக்கின்றன, இவற்றை அமுல் செய்யத் தவறினால் அதனால் ஏற்படக்கூடிய நிலைமையைச் சமாளிப்பது சுலபமாக இராது' என்று இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வி. வி. கிரி சென்னையில் ஒரு கூட்டத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

ராஜாஜி மண்டபத்தில் சென்னை வர்த்தகர்களின் கூட்டமொன்று நடைபெற்றது. அக்கூட்டத்தில் கிரி உரைநிகழ்த்தினார்.

வீடுகள் தோறும் சிறு தொழில் கிராமங்கள் தோறும் விவசாயப்பண்ணை என்று புதிய சுலோகமொன்றையும் திரு. கிரி எழுப்பினார்.

உள்நாட்டு மூலப்பொருள்களையும் வேலைத்திறனையும் பயன்படுத்தி நாட்டின் பொருளாதாரத்தை முன்னேற்றவேண்டுமென்றும் இந்தியக்குடியரசுத் தலைவர் கேட்டுக்கொண்டார். விவசாயம் சிறு தொழில் விருத்திக்குப்புதியதிட்டம் அமைக்கப்படவேண்டுமென்றும் திரு. கிரி கூறினார்.

## ''நால்வர் மொழிப்படி வாழ்வோம்''

யாழ்ப்பாணம், சனி

'சீரிய வாழ்வுவாழ்வதற்கு சைவசமயிகளுக்கு சிறந்த வழிகாட்டிகளாக நால்வர் தோன்றி தேவாரதிருவாசகங்களாகிய தெய்வத்திருமுறையை அருளினர். அத்திருமுறைகளின்படி நாம் நடப்போமாகில் நிச்சயம் பிறவிப்பயனை அடைய முடியும்

இவ்வாறு வவனிக்குளம் சிவாலயத்தின் முன்பு நடாத்தப்பட்ட மாணிக்கவாசகர் தினவிழாவில் விசேட பேச்சாளராகக் கலந்து உரையாற்றுகையில்கரைச்சி தமிழாசிரியர் சங்கத் தலைவர் திரு. ஆர். ரீ. சுப்பிரமணியம் கூறினார்.

துணைக்காய் காரியாதிகாரி திரு. த. மார்க்கண்டு தலைமையில் நடாத்தப்பட்ட இவ்விழாவில் குருகுல ஆசிரியர் திரு. சி. கனகநாயகம் திரு. செ. மயில்வாகனம் சமாதானநீதிபதி திரு. சோமசுந்தரம் திரு. மு மகாலிங்கம் உட்படப்பலர் உரையாற்றினர்.

அன்னதானம், கூட்டுப் பாடல், பூசை ஆதிய சகல நிகழ்ச்சிகளும் இடம் பெற்றன,

## உடல் உறுதிபெற்றாலே உள்ளம் உறுதிபெறும்

முசலி, ஞாயிறு

உடலுறுதியில்லாத எந்த மாணவனும் மனஉறுதியுடன் வாழமுடியாது. எனவே உடலுறுதி ஏற்படக்

## 'பாரிஸ் பேச்சுவார்த்தையில் ஹனோய் ஒத்துழைப்புத்தந்து ஒரு முடிவுக்கு வரவேண்டும்'

### ஹனோய்க்கு அதிபர் நிக்சனின் வேண்டுகோள்

வாஷிங்டன், ஜூலை 12

'பாரிஸ் சமாதானப் பேச்சுவார்த்தையில் என்னுடன் ஒத்துழைத்து ஒரு சமரச முடிவுக்கு வரவேண்டும்.'

ரெலிவிஷன் மூலம் அளித்த பேட்டியில் தலைவர் நிக்சன் ஹனோய்க்கு மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

அவர் மேலும்தொடர்ந்து பேசுகையில், பாரிஸில் நடைபெறவிருக்கும் அமைதிப் பேச்சுவார்த்தையில் கலந்து கொள்ளும் அமெரிக்க குழுவுக்குத் தலைமைதாங்க திரு. டேவிட் புறூசை நியமித்துள்ளார் எனவும் குறிப்பிட்டுள்ளார். மேலும் ஹனோய் அமெரிக்க தூதுக்குழுவுக்கு புதியதொரு தலைவரை நியமிக்கவேண்டுமென அபிப்பிராயப்பட்டதாகத் தெரிய வந்ததால் தனது நடவடிக்கையை ஹனோய்விரும்புமென்று எனவும் தெரிவித்துள்ளார்.

இக்குழுவின் தலைவராக இதுவரையிருந்த திரு. பிலிப்ஹபீப் நிலைமையில் எதுவித முன்னேற்றமும் காணப்படாததால் கடந்த நவம்பரில் தனது பதவியை ராஜினாமாச் செய்துள்ளார்.

அமெரிக்க படைகளை வாபஸ் பெறும் திகதியை நிக்சன் அறிவித்தால் கம்யூனிஸ்டுகள் பேச்சுவார்த்தைக்கு பூரண விருப்புத் தெரிவிப்பார்கள் என்ற ஆலோசனையை நிக்சன் நிராகரித்துள்ளார்.

தென்வியட்னாமியர் தங்களுக்கு வரும் ஆபத்தை எதிர்ப்புகளைச் சமாளிக்கக் கூடிய அளவு பலம் வாய்ந்தவர்களாகும் வரை எங்கள் படை அங்கு இருக்கும் என்பதை எதிரிகள் உணர்ந்தார்கள். ஆனால் அவர்கள் பேச்சுவார்த்தைகள் நடாத்த உண்மையான தூண்டுதல் ஒன்றையுடையார்கள் என நான் கருதுவேன். அமெரிக்க படைகளைப் பாதுகாப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகளை நான் எடுப்பேன், எங்களது ஆகாய விமானங்களை வடவியட்னாம் தாக்கினால் நான் எங்களது ஆகாயப்படையை அத்தாக்குதலை முறியடிக்கப் பயன்படுத்துவேன் எனவும் நிக்சன் தனது ரெலிவிஷன் பேட்டியின்போது குறிப்பிட்டார்.

## மீண்டும் பேச்சுவார்த்தை

பான் (டாட்) ஜூலை 12

## கரும்பலகை இல்லை வெண்திரை உண்டு

பான், (டாட்) ஜூலை 12

ஜெர்மன் கூட்டாட்சி குடியரசில் புடே-எனிங்லோ என்னும் இடத்திலுள்ளதொழில் நுட்ப பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் இப்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால் நம்மவர்கள் அநீதியை எடுத்துக் கூறக்கூட முடியாது மேலதிகாரிகளுக்கு அஞ்சிவாழ வேண்டியுளளது என்றார்.

சங்கத்தின் நடப்பு வருட உத்தியோகஸ்தர் களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர். தலைவர் திரு

## 'அரசு மாறலாம் கூட்டுறவு மாறாது'

உடுவில், ஞாயிறு

ஒரு சிலரால் ஆரம்பிக்கப்பட்ட கூட்டுறவு ஸ்தாபனம் இன்று அகில உலக கூட்டுறவுச் சம்மேளனமாக விளங்குகின்றது. நமது நாட்டு பொருளாதாரத்தை கூட்டுறவு முறையில் விருத்தி செய்ய எதிர்கால சமுதாயத்தினராகிய இளைஞர்கள் முன்வர வேண்டும் என்று மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை கூட்டுறவுச் சங்கத்தின் கூட்டுறவு தின விழாவில் பேசிய இளைப்பாறிய கூட்டுறவு உதவி ஆணையாளர் திரு. ஆர். சி, எஸ். குக் கூறினார்.

பாடசாலை அதிபர் திரு. வி. ஜி. சம்பந்தன் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் திரு. குக் மேலும் பேசுகையில் கூறியதாவது:-

நமது நாட்டு அரசாங்கங்கள் மாறி மாறி வரலாம். ஆனால் கூட்டுறவு இயக்கம் என்றும் மாற்றமடையாது மாணவர்கள தங்களுக்கு வேண்டிய பாடப்புத்தகங்களையும் பயிற்சிப் புத்தகங்களையும் கூட்டுறவு அடிப்படையில் பெற்றுக்கொளவதால் அவாகளுக்கு பலவிதத்திலும் நன்மையுண்டாகிறது. என்றார்.

## மீண்டும் பழைய இடங்களில் வேலை

மீதோட்டமுல்லை, ஞாயிறு

அரசியல் காரணங்களுக்காக சென்ற அரசாங்கத்தினால் இடமாற்றம் செய்யப்பட்ட இ. போ. ச. ஊழியர்கள் மீண்டும் பழைய இடங்களுக்கும் அவர்கள் விரும்பிய இடங்களுக்கும் இடமாற்றம் செய்யப்படுவதாக தெரிய வருகிறது.

கொழும்பில் உள்ள சகல பஸ் டிப்போக்களில் இருந்து இவ்விதம் இடமாற்றம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் கொழும்பு டிப்போக்களுக்கு இடமாற்றம் செய்யப்படுகின்றனர்.

மீதோட்ட முல்லைடிப்போவில் இருந்து புத்தளம் டிப்போவுக்கு சென்ற அரசாங்கத்தினால் இடம் மாற்றம் செய்யப்பட்ட ஐவர் மீண்டும் இப்பொழுது மீதோட்ட முல்லை டிப்போக்கு இடமாற்றம் செய்யப்பட்டனர்.

தார்.

## வழிபடுவோர் சங்கம்

மாவிட்டபுரம், ஞாயிறு

மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் முன்றலில் நடைபெற்ற பொதுக்கூட்டத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்ட மாவை முருகன் வழிபடுவோர் சங்கத்தின் நிர்வாகிகளாக தெரிவு செய்யப்பட்டோர் விபரம் வருமாறு:

போஷகர்: ஆதீனகர்த்தா பிரமஸ்ரீ சு. துரைச்சாமி குருக்கள், உபபோஷகர்: பிரதமகுரு து. சண்முகநாதக்குருக்கள் தலைவர்: திரு. செ. சுந்தரலிங்கம், உபதலைவர்கள்: திரு மு. திடவீரசிங்கம், திரு. த. சுப்பிரமணியம், காரியதசி: திரு வ. தம்பிப்பிள்ளை, உபகாரியதரிசி: பி. பாலசிங்கம், தனதிகாரி பண்டிதர் வே. சங்கரப்பிள்ளை, உபதனதிகாரி: திரு. சின்னத்துரை நிர்வாகசபை ஒன்றும் தெரிவுசெய்யப்பட்டது.

## குருபூர்ணிமா

யாழ்ப்பாணம், திங்கள்

உருத்திரபுரம் மகாதேவ ஆச்சிரமத்தில் வழக்கம் போல் இவ்வருஷமும் குருபூர்ணிமா கொண்டாடப்படவிருக்கிறது. இம்மாதம் 18-ம் திகதி நடைபெறும் இவ்வைபவத்தில் பகல் நடராஜர் அபிஷேகம், வியாசர்பூசை, குருபாத பூசை, மகேஸ்வரபூசையும் இரவு லலிதா சகஸ்ரநாம அர்ச்சனையும் நடைபெறும்.

## 'கிழக்கரை அபிவிருத்தி முன்னணி'

அம்பன், ஞாயிறு

செம்பியன்பற்று கிராமசபை முள்ளிப்பற்றுக்கிராமசபை (வடபகுதி) குடத்தனைக் கிராமசபை ஆகிய மூன்று கிராமசபை எல்லைகளுக்குட்பட்ட பகுதிகளிலிருந்து தெரிவு செய்யப்பட்ட 25 நிர்வாகசபை அங்கத்தவர்களைக்கொண்ட கிழைக்கரை அபிவிருத்தி முன்னணி தாளையடியில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இக் கமிட்டியின் பிரதம இணைப்பாளராக நாகர்கோயில் கிராம சேவையாளர் திரு, பி. அ. செபஸ்தின்ராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார், கடற்றொழில், கமத்தொழில், கைத்தொழில் பகுதிகளைக் கண்காணிக்கும் பொருட்டு ஒவ்வொரு பகுதிக்கும் மும்மூன்று உத்தியோகஸ்தர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். இப்பகுதிகளில் நிலவும் குறைகளை அரசாங்கத்துக்குத் தெரியப்படுத்தும் நோக்கத்துடன் இச்சபை நிறுவப்பட்டது.

றனர்.

## "கல்விப்பணியே முதலில்"

யாழ்ப்பாணம், திங்கள்

"எதிர் காலப் பிரஜைகளாக விளங்கும் சிறார்களின் அறிவுக்கண்ணைத் திறக்கின்ற கல்வியே நாட்டின் அத்தியாவசிய தேவையாகும். ஆகவே கிளிநொச்சிப் பகுதியில் வாழுகின்ற சிறார்களின் கல்வியையே முதற் கருத்தாகக் கொண்டுழைப்பேன்" என கிளிநொச்சி ஆட்சிமன்ற உறுப்பினர் திரு ஆனந்தசங்கரி கிளிநொச்சி குமாரபுரத்தில் தமக்கு அளிக்கப்பட்ட வரவேற்புக் கூட்டத்திற் பேசும் போது தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் வீதிகள் வைத்திய வசதிகள் போன்றவை நாட்டிற்கு மூலாதாரமான தேவைகளாயினும் இவற்றைவிட கல்விப் பணிக்கே நாம் முதலிடம் வழங்கவேண்டுமென்றும், இதற்கு உள்ளூராட்சி மன்றங்களின் ஒத்துழைப்புத் தேவையென்றும் சொன்னார்.

திருவாளர்கள் ஆறுமுகம், ஜோர்ஜ், எம். கணேசபிள்ளை வே, சுப்பிரமணியம், இ. கிருஷ்ணராஜா, கனகரத்தினம் ஆகியோரும் இக்கூட்டத்தில் உரையாற்றினர்.

(கு. வி. ம)

## தாக்கப்பட்டாராம்

விஸ்வமடு, ஞாயிறு

கடந்த சில தினங்களுக்கு முன் விஸ்வமடு விவசாயப் படை முகாமிலிருந்து தற்காலிக வேலைநீக்கம் செய்யப்பட்ட மூன்று வீரர்களில் ஒருவர், விஸ்வமடு பிரதான வீதியில் வைத்துப் படுமோசமாகத் தாக்கப்பட்டாராம் இதுசம்பந்தமாக கிளிநொச்சிப் பொலிசார் புலன்விசாரணை செய்துவருகின்றனர் தாக்கப்பட்டவர் வரணி வடக்கைச் சேர்ந்தவராவர்.

## திவ்ய சற்பிரசாதத் திருநாள்

முசலி, ஞாயிறு

நானாட்டான் ஆரோக்கிய மாதா தேவாலயத்தில் சற்பிரசாதச் சுற்றுப்பிரகாரம் நேற்று நடைபெற்றது தெய்வீக ஆராதனையை நானாட்டான் பங்குகுரவர் வண. பிதா - தோமஸ் சவுந்தரநாயகம் நிறைவேற்றினார்.

தொழிலாளர் சங்கத்தின் பருத்தித்துறை இ. போ. ச. டிப்போ ஊழியர்களின் வருடாந்தக் கூட்டத்திற்குத் தலைமை வகித்த பிராந்திய தொழிற்சங்கப் பிரதிநிதி திரு. எஸ். நடராசா தனது தலைமையுரையில் உறுதியளித்தார்.

பருத்தித்துறை டிப்போ கிளைச் சங்கத்தின் புதிய தலைவராகத் தெரிவு செய்யப்பட்ட திரு. வீ. காங்கேசு பேசுகையில் தொழிலாளரிடையே ஒற்றுமையை ஏற்படுத்துவதும் அவர்களது நலனைப் பேணுவதும் பொது மக்களுக்கு நற்சேவை புரிவதுமே எமது தொழிற்சங்கத்தின் கடமையென்றார்.

திரு. எஸ். குமாரசாமிப்பிள்ளை செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். மூவரடங்கிய நிர்வாகக் குழுவும் நிறுவப்பட்டது.

## பேச்சு போட்டியில் பரிசு பெற்றார்

சுன்னாகம், ஞாயிறு

மல்லாகம் இந்துக்கல்லூரி சைவ மகா சபையினரால் மாணிக்கவாசகசுவாமிகள் விழா அண்மையில் கல்லூரி அதிபர் திரு. சி. பொன்னையா தலைமையில் கொண்டாடப்பட்டது. இவ்விழாவில் செல்வி பண்டிதை தங்கம்மா அப்பாக்குட்டி சிறப்புச்சொற்பொழிவாற்றினார். மேற்படி விழாவையொட்டி நடாத்தப்பட்ட பேச்சுப் போட்டியில் மேற்பிரிவில் முதலாமிடத்தை செல்வன் நா. கதிர்காமநாதனும், செல்வி மதிவதனியும், இரண்டாம் இடத்தை இ. நடராசாவும். சி. இந்துதேவியும், மூன்றாம் இடத்தை வ. சற்குணசிங்கமும். பொ. நவலட்சுமியும் பெற்றனர்.

மத்தியபிரிவில் க. அருணகிரிநாதன், ந. ஜெயமணி, முதலாமிடத்தையும், இ. பாஸ்கரலிங்கம், செ. செவ்வந்தி இரண்டாம் இடத்தையும், தா. துரைசிங்கம், இ. வாசுகி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

கீழ்ப்பிரிவில் ந. கமலநாதன், க. ஜலஜா முதலாமிடத்தையும், மு. கௌரிகாந்தன், க. வனஜா இரண்டாமிடத்தையும், இ. செந்திவேல், ச. பத்மலோசனி மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

ஆரம்பபிரிவில் ந. ஜெயதரன். நா. சந்திரமலர் முதலாம் இடத்தையும், நா. செந்தில்குமார், செ வசந்தி, இரண்டாம் இடத்தையும், ந. இரகுநாதன், கு. வசந்தமாலா மூன்றாம் இடத்தையும் பெற்றனர்.

மிக்கவேண்டுமென அபிப்பிராயப்பட்டதாகத் தெரிய வந்ததால் தனது நடவடிக்கையை ஹேனேய்விரும்பலாம் எனவும் தெரிவித்துளார்.

## காகித நாற்காலி

பான் (டாட்), ஜூலை 12

உலோகத்திற்கு இணையான உறுதியுள்ள புதுமையான காகிதத்தை ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசு விஞ்ஞானிகள் உருவாக்கியுள்ளனர். இந்தக் காகிதத்தைக் கிழிக்கமுடியாது. மெல்லிய கண்ணாடி இழை நூலை இணைத்து, இக்காகிதத்தைத் தயாரிக்கிறார்கள், ஒரு மில்லி மீட்டரில் நூற்றில் ஒரு பங்கு அளவுச்கு இந் நூல் இருக்கும்: இந்தக் காகிதத்தைப் பயன்படுத்தி நாற்காலி செய்யலாம். சாதாரண மரம் போல உளுத்துப் போகாது. மாறுபட்ட கால நிலைகளுக்கு ஈடு கொடுக்கும். காகித நாற்காலி வேண்டாம் என்றால் நெருப்பில் போட்டு எரித்துவிடலாம்.

பிரதமர்

## தீவிபத்தில் மரணம்

ரிகாவில், ஜூலை 12

62வயதான ஐஸ்லாந்தின் பிரதமர் பிஜார்னி பெனடிக்ஸன் தீவிபத்துக்குப் பலியாகி மாண்டார். பிஜார்னியுடன் அவரது மனைவியும், பேரனும் தீயில் எரிந்து மாண்டனர்.

பிரதமரின் இல்லம் தியவல்லா என்ற இடத்திலுள்ளது. இவ்வீடு தீப்பற்றிய போதே இவர்கள் மூவரும் தீக்குப் பலியாகினர். மரத்தினால் கட்டப்பட்ட இந்தவீடு தீயணைக்கும்படையினர் வருவதற்கு முன்னர் எரிந்து சாம்பலாகியது.

1963ம் ஆண்டிலிருந்து ஐஸ்லாந்தின் பிரதமராக இருந்துவரும் இவர் விடுதலையைக் கழிப்பதற்காக தனது தனைவி பிஜோரன் டோட்டினுடனும், இரண்டு வயதுப் பேரப்பிள்ளையுடனும் மேற்படி இல்லத்தில் வந்து தங்கியிருந்தார். தங்கியிருக்கும் பொழுதுதான் இப்பரிதாப சம்பவம் நடந்தது. ஐஸ்லாந்து மக்கள் பிரதமரின் திடீர் மரணத்தை தெரிவித்து துக்கம் அனுஷ்டிக்கின்றனர்.

தார்கள். ஆனால் அவர்கள்

## மீண்டும் பேச்சுவார்த்தை

பான் (டாட்) ஜூலை 12

கிழக்கு ஜெர்மனியுடன் சமரசம் காண மேற்கு ஜெர்மன் தலைமை அமைச்சர் வில்லிபிராண்ட் ஆவலாக இருக்கிறார். கிழக்கு ஜெர்மன் தலைமை அமைச்சர் வில்லி ஸ்டாப், மேற்கு ஜெர்மன் தலைமையமைச்சர் வில்லிபிராண்ட் இருவரும் முதலில் எர்பர்ட் நகரிலும் பின்னர், காசல் நகரிலும் சந்தித்துப் பேசினார்கள். கிழக்கு ஜெர்மன் தலைமை அமைச்சர் முதற்படியாக கிழக்கு ஜெர்மனியை தனி நாடாக அங்கீகரிக்கவேண்டும் என்று நிபந்தனை விதித்திருக்கிறார். மீண்டும் பேச்சு நடக்கவிருக்கிறது.

## நாஸர் மேலும் 10 நாட்கள் தங்குவார்

மாஸ்கோ ஜூலை 12

எகிப்திய ஜனாதிபதி நாஸர் சோவியத் தலைவர்களோடு பேச்சுவார்த்தை நடாத்துவதில் ஈடுபட்டுள்ளார்.

இரண்டு நாட்கள் பேச்சுவார்த்தை நடாத்திய பின் இரு தரப்பினரும் ஒரு வார காலம் தனித்தனியே தாங்கள் நடாத்திய பேச்சுவார்த்தை பற்றி சிந்தித்து முடிவுக்கு வருவதாக ஏற்கனவே திட்டமிடப் பட்டிருந்தது ஜனாதிபதி நாஸர் தனது பிரயாணத் திட்டத்தை மாற்றி மேலும் 10 நாட்கள் மாஸ்கோவில் தங்கி பேச்சுவார்த்தை நடாத்தவிருக்கிறார்.

## கமிஷன் அறிக்கை நிராகரிப்பு

ஜாகர்த்தா, ஜூலை 12

லஞ்சஊழல் மோசடி ஆகியவை சம்பந்தமாக ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு இந்தோனேஷிய அதிபர் ஜெனரல் சுஹார்ட்டோ நியமித்திருந்த விசாரணைக்கமிஷன் தனது அறிக்கையைச் சமர்ப்பித்தது. இந்த அறிக்கையில் ஏழு சிபார்சுகளைச் செய்திருந்தது. இந்தச் சிபார்சுகள் எதுவும் புதியதல்ல வென்றும் இவை ஏற்கனவே அமுல்செய்யப்பட்டவையென்றும் ஜெனரல் சுஹார்ட்டோ தெரிவித்து கமிஷனின் அறிக்கையையும் நிராகரித்து கமிஷனையும் கலைத்துவிட்டார்.

ஜெர்மன் கூட்டாட்சி குடியரசில் புடே-எனிங்லோ என்னும் இடத்திலுள்ள தொழில் நுட்ப பயிற்சிக் கல்லூரி மாணவர்கள் இப்போது கரும்பலகையைப் பார்ப்பதில்லை, வெண்திரையைப்பார்த்துப் பாடம் படிக்கிறார்கள். முக்கியமான தொழில் நுட்ப வரைப் படங்கள், விஞ்ஞானப் படங்கள் திரைப்படங்களாகப் பிடிக்கப்பட்டு, டெலிவிஷன் மூலம் காட்டப்படுகிறது. ஆசிரியர் இந்தப் படங்களைச் சுட்டிக்காட்டிப் பாடங்களைப் போதிக்கிறார்.

## இளைஞர்களின் கடமை

ஊரதீவு, ஞாயிறு

தமிழ்க்கலைக்கும் கலாசாரத்திற்கும் புத்துயிரளிக்க வேண்டியது தமிழ் இளைஞர்களது கடமையாகும். இதை செவ்வனே நிறைவேற்றுவதற்கு ஒவ்வொரு இளைஞனும் தயாராகவேண்டும். இந்தக் கடமையை நிறைவேற்ற எழுத்துலகில் புதிய மாற்றத்தை ஏற்படுத்த இளைஞர்கள் தயாராகி விட்டார்கள் என்பதை இந்த விழா எடுத்துக் காட்டுகிறது.

புங்குடுதீவு கிராமசபைத் தலைவர் திரு கா. மதியாபரணம், புங்குடுதீவு கட்டடக் கலைபயிற்சி நிலைய மாணவர்கள் வெளியிட்ட 'வளர்பிறை' என்னும் சஞ்சிகை வெளியீட்டு விழாவின் போது மேற் கண்டவாறு குறிப்பிட்டார்.

நிலையமுன்றலில் நடைபெற்ற இவ்விழாவிற்கு வித்வான் பொன். அ. கனகசபை தலைமைவகித்தார். நிலைய மாணவர் மன்றத் தலைவர் செல்வன் எம். சிவலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார்.

புங்குடுதீவு நால்வர் நன்னெறித் திருமடநற்பொறுப்பாளர் புலவர் ஈழத்துச் சிவானந்தன், புங்குடுதீவு இளைஞர்கழகச் செயலாளர் திரு. க. திருநாவுக்கரசு. த. கிருபானந்தன் ஆகியோருட் படப்பலர் உரையாற்றினர்.

## வேல்விழா

ஊர்காவற்றுறை, ஞாயிறு

சரவணை - தேவபுரம் ஸ்ரீகதிர்வேலாயுத சுவாமி ஆலயத்தில் கதிர்காமதின வேல்விழா விசேட பூசைகள் ஆராதனைகள் வழமைபோல் நடைபெறவிருக்கின்றன.

## உள்ளம் உறுதிபெறும்

முசலி, ஞாயிறு

உடலுறுதியில்லாத எந்த மாணவனும் மனஉறுதியுடன் வாழமுடியாது எனவே உடலுறுதி ஏற்படக்கூடிய மெய்வல்லுநர் போட்டிகளைபாடசாலைகளில் அவசியம் நடாத்தவேண்டும்.

அடம்பன் மகாவித்தியாலயத்தில் நடைபெற்ற மெய்வல்லுநர் போட்டியில் கலந்து கொண்டுஉரையாற்றிய மன்னார் மாவட்ட கல்வியதிகாரி திரு. திருநாவுக்கரசு மேற்கண்டவாறு குறிப்பிட்டார்,

நெல்லியடி

## ப.ச. மின்சார விநியோகம்

உடுப்பிட்டி, ஞாயிறு

நெல்லியடிப்பட்டின சபை மின்சாரவிநியோகத் திட்டத்தின் ஒருபகுதி பூர்த்தியடைந்து விட்டது.

கரவெட்டிப் பகுதிகளுக்கு மின்சாரம் வழங்குவதற்காக அரசடியில் நிறுவப்பட்டுள்ள மின் இணைப்பு நிலையம் கடந்த புதன்முதல் இயங்கத் தொடங்கியுள்ளது மின்சார வேலைகளைச்செய்து வரும் தொழிலாளிகளேஎவ்வித ஆடம்பரமுமின்றி மின்சார விநியோகத்தை ஆரம்பித்து வைத்துள்ளனர். ஆனாலும் இச்சுற்றாடலில் உள்ள வீடுகளுக்கு இதுவரை மின்சாரஇணைப்பு வழங்கப்படவில்லை.

## நெசவுசாலை உடைத்து திருட்டு

புத்தூர், ஞாயிறு

நவக்கிரி நெசவாலைக்கதவுகள் உடைக்கப்பட்டு சேலைகள், வேட்டிகள், மணிக்கூடு முதலியன களவாடப்பட்டுள்ளது. இது சம்பந்தமாக ஆச்சுவேலிப் பொலிசில் புகார் செய்யப்பட்டுள்ளது.

நெசவுசாலையைத் தற்போது பொலிசார் காவல் புரிந்து வருகின்றனர். கைரேகை நிபுணர் வரவழைக்கப்பட்டுள்ளார். இது சம்பந்தமாக எவரும் கைதாகவில்லை.

## மருந்து களவு?

அம்பன், ஞாயிறு

அம்பன் அரசினர் வைத்தியசாலையில் பெண்கள் வாட்டில் வயிற்றோட்டத்தால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்குகொடுக்கும் எவிடோன் அறோபன் போன்ற பால்மாவகைகளவு போகின்றனவாம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மணிவாக்கு

உள்ளொன்று புறமொன்று இல்லாது இருந்தாலன்றி, களங்கமற்ற நேர்மை இருந்தாலன்றிக் கடவுளை அறிந்துணரமுடியாது. கோணல் புத்தியுளையவரிடமிருந்து கடவுள் வெகு தொலைவிலேயே இருக்கின்றார்

—ராமகிருஷ்ணபரம ஹம்சர்


# ஈழநாடு

Eelanadu National Tamil Daily
Telegram: "EELANADU" Jaffna.
Post Box: 49. Jaffna. Telephone: 889.

யாழ்ப்பாணம் சாதாரண வருஷம் ஆனி மாதம் 29-ந் திகதி (13-7-70)


## விவசாயமும் தொழிலும்

'வீடுதோறும் ஒரு சிறு தொழில் கிராமம் தோறும் ஒரு விவசாயப்பண்ணை' என்ற புதிய சுலோகமொன்றை எழுப்பியிருக்கிறார். இந்தியக் குடியரசுத் தலைவர் திரு. வி. வி கிரி இது இந்திய மக்கள் முன்வைத்துள்ள புதிய சுலோகமென்றாலும் இலங்கையும் இதைப் பின்பற்றுவது தவறல்ல

இந்தியா விடுதலையடைந்த சமயத்தில் தான் இலங்கையும் விடுதலையடைந்தது. இலங்கையைவிடப்பல மடங்கு பெரியது இந்தியா. அங்கு மக்கள் தொகையும் அதிகம். அதேபோல் அங்கு பிரச்னைகளும் அதிகம். உள்நாட்டுப் பிரச்னைகள் மட்டுமல்ல வெளிநாட்டுப் பிரச்னைகளும் அதற்குண்டு அதனுடன் ஒப்பிடுகையில் இலங்கையின் பிரச்னைகள் பெரியதல்ல. ஆனாலும் கடந்த இருபத்திரெண்டு ஆண்டுகளில் விவசாயம், கைத்தொழில், சிறு தொழில், கனரகத்தொழில்களில் இந்தியா பெரிதும் முன்னேற்றமடைந்துள்ளது. பல துறைகளிலும் உள்நாட்டுத் தேவையை நிறைவேற்றிவரும் இந்தியா என்ஜினியரிங் சாதனங்களைக்கூட வெளிநாடுகள் சிலவற்றுக்கு ஏற்றுமதி செய்துவருகின்றது இலங்கையைப் பொறுத்தவரையில் விவசாய அபிவிருத்தியில் சமீபகாலமாகத்தான் அக்கறை செலுத்தப்பட்டுவருகிறது. 'உணவில் தன்னிறைவு காண்போம்' என்ற சுலோகம் புதிய சுலோகமாகத்தானிருக்கிறது. உணவு உற்பத்தி அதிகரிப்புத்திட்டம் கூட கடதாசித்திட்டமாகத்தானிருக்கிறதென்றும் கூறப்படுகிறது. 1960-ம் ஆண்டுக்குப் பின்னர் தான் இங்கு கைத்தொழில், சிறு தொழில்களில் அக்கறை செலுத்தப்பட்டதென்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆனாலும் விவசாயம், கைத்தொழில், சிறுதொழில், கனரகத்தொழிலில் போதிய முன்னேற்றம் ஏற்படவில்லை. இலங்கையைவிட இத்துறைகளில் வெகுவாக முன்னேற்றமடைந்துள்ள இந்தியாவில் 'வீடுதோறும் ஒரு சிறு தொழில், கிராமந்தோறும் விவசாயப்பண்ணை' என்று திரு. கிரி புதிய சுலோகம் தொடங்கியிருக்கிறாரென்றால் இந்தச் சுலோகம் இங்கு மிக மிக அவசியமென்பதைச் சொல்லவேண்டியதில்லை. விவசாயம், சிறு தொழில் கைத்தொழில் அபிவிருத்திக்குப் புதிய திட்டம் வகுத்து, அவற்றை ஒருமுகப்படுத்திச் செயற்படுத்த வேண்டும், இன்றைய அரசாங்கம் இதைச் செய்யுமென்று மக்கள் நம்புகிறார்கள், எதிர்பார்க்கிறார்கள். இதைத் துரிதமாகச் செய்ய வேண்டுமென்பதே அவர்களது ஆவல்.

## விஷமத்தனம்

கடந்த இரு வாரங்களாக வடபகுதியில் சில இடங்களில் பெயர்ப் பலகைகளில் சில எழுத்துக்கள் மீது தார் பூசி அழிக்கப்பட்டு வந்திருக்கிறது. யார் எதற்காக இந்த விஷமத்தனமான செயலில் ஈடுபடுகிறார்களென்பது இதுவரை தெரியவில்லை. பொலிசார் இப்பொழுது விசா... யாளமிடும் செயல்களும், மிரட்டல் கடிதங்களும் நாட்டை என்ன நிலைக்குக் கொண்டு வந்ததென்பதை 1958-ம் ஆண்டில் நிகழ்ந்த பயங்கரச் சம்பவங்கள் இன்றும் மக்கள் மனதிலிருந்து மறைந்திருக்கமாட்டாது.

யார் என்ன காரணத்துக்காக இப்போது இந்த எழுத்து அழிப்பு விஷமத்...

## செனட்டில் நீதியமைச்சருக்கு 'திரு' பதில் - 7

# "இந்திய அரசியல் அமைப்பு போன்றதொன்றேஎமக்குவேண்டும்"

அடுத்து நான் ஸ்கொத்லாந்திலுள்ள பிரச்னைபற்றிக் குறிப்பிட விரும்புகிறேன். இந்தப் பிரச்னை பற்றி விரிவாக எடுத்துக்கூற வாய்ப்புக் கிடைத்துள்ளதையிட்டு நான் மகிழ்ச்சியடைகிறேன். ஏனெனில் தனி ஆட்சி அரசியல் அமைப்புள்ள அரசாங்கத்தில் சிறுபான்மையினரைத் திருப்திப்படுத்தககூடிய வாய்ப்புகள் உள்ளன என்பதை விளக்கக்கூடியதாக விருக்கிறது. எமது கட்சி சமஷ்டி பற்றிக் கூறுகிறது. சிறுபான்மையினரின் உரிமைகளையும் நலன்களையும் ஒரு அரசியல் அமைப்பின்மூலம் பாதுகாப்பதையே அடிப்படைக் கருத்தாகக் கொண்டுள்ளது. அது பிரதேச ஆட்சிமுறையாகவிருக்கலாம். அல்லது சமஷ்டி முறையாகவிருக்கலாம். ஆனால் சிறுபான்மையினரின் உரிமைகள் பாதுகாக்கப்படவேண்டும். இங்கிலாந்தின் ஒற்றையாட்சி அமைப்பின்கீழ் ஸ்கொட்லாந்தின் சிறுபான்மை மக்களின் உரிமைகளைப் பாதுகாப்பதற்கு வேண்டிய வசதிகள் ஏராளமாக உள்ளன. முதலாவதாக ஸ்கொத்லாந்துக்கு அரசாங்க செயலாளர் ஒருவர் இருக்கிறார். அதற்காக தனிப்பட்ட அமைச்சுஇருக்கிறது: ஆட்சிமன்றத்தில் ஸ்கொத்லாந்து விவகாரங்களைக் கவனிக்கவென்றே ஒருதனி அமைச்சு இருக்கிறது. இரண்டாவதாக ஸ்கொத்லாந்துக்கு வேறான சட்டநீதிமன்றங்கள் உள்ளன. மூன்றாவதாக ஸ்கொட்லாந்தின் கல்வி முறையும் இங்கிலாந்திலிருந்து வேறானதாகவேயுள்ளது. நான்காவதாக ஸ்கொட்லாந்தின் அரசாங்க செயலாளரின்கீழ் விவசாய கடற்றொழில் இலாகா கல்வி இலாகா, ஸ்கொட்லாந்து அபிவிருத்தி இலாகா, உள்நாட்டு சௌக்கிய இலாகா ஆகியன உள்ளன. அங்கு 4 வெவ்வேறு நிர்வாகப் பிரிவுகள் உள்ளன. இவை ஸ்கொத்லாந்து அமைச்சரின் கட்டுப்பாட்டின்கீழ் அங்கு பரவலாக வமைந்துள்ளன. ஒற்றையாட்சி அமைப்பின்கீழ் கலாச்சாரம்...

ஸ்கொட்லாந்தின் நலனைக் கவனிப்பதற்கு தனியாகவே ஒரு அமைச்சர் நியமிக்கப்பட்டுள்ளார். ஸ்கொட்லாந்தில் பிரிவினைக் கோரிக்கையும் இருக்கிறது.

ஒற்றையாட்சியமைப்பின் கீழ் பல இன மக்கள் வாழலாம். ஆனால் சிறுபான்மையினரின் தேவைகளை அளிக்கத்தக்கவகையில் மேற்படி அரசியல் திட்டம் வகுக்கப்பட்டிருக்கவேண்டும்.

ஸ்கொட்லாந்தில் பிரதேச ஆட்சியமைப்புத் தன்மையுள்ளது. அங்கு ஸ்கொட்லாந்து மக்களின் உரிமைகள் பாதுகாக்கப்படுகின்றன. இத்துடன் 1688-ம் ஆண்டு அவர்களுக்கு குடியுரிமைச் சட்டமும்கிடைத்தது. ஸ்கொட்லாந்து கைப்பற்றப்பட்ட பின்னர் ஒரு அரசாங்கம் இருக்கும்பொழுதும் அவைகள் தனியான ஸ்கொட்லாந்துசபையொன்றைக் கோரிக்கொண்டிருக்கிறார்கள். கன்சர்வேட்டிவ் கட்சி பதவிக்கு வந்தால் ஸ்கொட்லாந்துக்கு சட்ட அதிகாரத்தோடு கூடிய புறம்பானதொருசபைஇருக்கும் என இங்கிலாந்தின் தற்போதைய பிரதமர்திரு ஹீத் 1969 ம் ஆண்டு தெரிவித்தார். இதை நன்றாக விளங்கிக்கொள்ளவேண்டும் என நான் கேட்டுக்கொள்ளுகின்றேன். இது புராணக் கதையல்ல. இது வரலாறு இது உலகின் மற்றப்பகுதிகளில் நடைபெறும் சம்பவம் எனவே சிறுபான்மையினரின் உரிமைகளைப் பாதுகாக்க சட்ட அமைப்பை சாதகமாக வைப்பதற்கு அரசாங்க அதிகாரம் பகிர்ந்தளிக்கப்படுமென்பதை நான் விரிவுபடுத்திக் கூற வேண்டிய அவசியமில்லை.

எமது அரசியல் திட்டம் திருத்தி அமைக்கப்படுகின்ற நிலையில் நாம் இருப்பதால் இந்த வேளையில் இச்சபையில் நான் ஒரு கருத்துவெளியிட அனு[illegible]தரவேண்டும் அதாவது [illegible]ங்கள மக்கள் மத்தியில் சமஷ்டி பற்றிதவறான பிரச்சாரம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சிங்கள [illegible] கருத்து[illegible] சமஷ்டியெ[illegible]ல் முதலாவ...

'...சுயபாஷை போதனமொழியாகவிருக்கும் என்ற அம்சத்தை வெளியிடவில்லை என்பதையிட்டுநாம் வருந்துகிறோம்''

இந்த திருத்தப் பிரேரணையைக் கொண்டு வருவதற்கு எனது கட்சிக்கும் எனக்கும் மனக்குழப்பம்அல்லது மயக்கம் ஏற்பட்டதா? அல்லது இந்தப் பிரச்னை குறித்து எனது மதிப்புக்குரியஅமைச்சரின் தப்பெண்ணம் கொண்டிருக்கிறாரா? என்ற கேள்வி எழுகிறது.

'நாங்கள் தான் இந்நாட்டின் தலையாய மக்கள் அப்படியிருக்கும்போது நாம் நீதிமன்றங்களுக்குச் சென்றால் அங்கு வழக்காளி, சாட்சி, வழக்கறிஞர் நீதிபதி யாவரும் சிங்களவர்களாகவிருக்கிறார்கள். ஆனால் வழக்குவிசாரணைகள் ஆங்கிலத்தில் நடைபெறுகின்றது. இது இயலொழுங்குக்கு மாறானதாகவுள்ளது எனது மதிப்புக்குரிய எனது நண்பரான நீதியமைச்சர் குறிப்பிட்டார்.

அவரது இந்தக் கூற்றிலிருந்து சாதாரண மனிதனின் கருத்துக்களை வெளியிடும் கருவியாகத் தாய்மொழியமைகிறது என்ற அடிப்படைத் தத்துவம் தெளிவாகிறது.

இதுயாவராலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட உண்மையாகும். ஐ. நா. கல்வி ஸ்தாபனமான யுனெஸ்கோ இதை ஏற்றுள்ளது. உலகின் கல்வி நிபுணர்கள் யாவரும் இந்த உண்மையையேற்று ஒரு பிள்ளையின் போதனமொழி தாய்மொழியேயெனவும் அதுவே சரியான வழியெனவும், ஏற்றுக்கொண்டுள்ளனர்.

'சுயபாஷை' என்னும் சொல் மயக்கத்தைத் தருவதாக, தவறான வழியில் இட்டுச்செல்வதாகவுள்ளது. மொழி எங்களுக்கு அடிப்படையானதொன்றாகும். தமிழர்களையும் தமிழ்ப்பேசும் மக்களையும் பொறுத்தளவில்- எங்களது தாய்மொழி தமிழ்மொழியாகும். இலங்கையின் எந்தப்பகுதியில் இருந்தாலும் ஒரு தமிழ் பிள்ளை தாய்மொழியாகிய தமிழ் மொழிமூலம் கல்விபெற...

அல்லது அவனை வேறுபாடசாலைக்கு அனுப்பவேண்டிவரும். ஒருமாணவனுக்கு ஒரு பாடசாலை அமைக்க வேண்டும் என நான் உங்களிடமிருந்து எதிர்பார்க்கவில்லை. அது நியாயமான கோரிக்கையுமல்ல.

இது நிந்தாவூரில் உள்ள சிங்கள மாணவனுக்கும்- அதாவது சிங்களம் போதனமொழியாகவுள்ளபாடசாலையில்லாத அவனுக்கும் பொருத்தமானதாகும், முன்னைய கல்வியமைச்சர் திரு. இரியகொலை செய்திருக்கலாம். ஆனால் மதிப்புக்குரிய பதியுதீன்மாமூத் செய்வார் என நான்எதிர்பார்க்கவில்லை. ஆனால் அம்பாந்தோட்டையிலுள்ள தமிழ் மாணவனுக்கும் நிந்தாவூரிலுள்ள சிங்கள மாணவனுக்கும் ஒரேவிதமான உரிமை வழங்கப்படவேண்டும் அதாவது தாய்மொழியில் கல்வி பயிலும் அடிப்படை உரிமை அளிக்கப்பட வேண்டும்.

நான் ஒழிப்பு மறைப்பின்றி வெளிப்படையாகவே யாவற்றையும் கூற விரும்புகிறேன். நாங்கள் சிறுபான்மையினர் எமது மூதாதையரின் செயல்களுக்காகப் பழிவாங்கப்படுவோம் என அச்சுறுத்தப்பட்டுள்ளோம். யாழ்ப்பாணத்தில் ஒருதலைவர் எங்கள் கட்சி தமிழர்களின் உரிமைகளுக்காகப் போராடுகிறது எனக் குறிப்பிட்டார். நாம் அகிம்சை வழியையே பின்பற்றிப் போராட்டங்களை நடாத்துகிறோம். சத்தியாக்கிரகம் நடந்தவேளையில் 8 மைல் நீளமான ஊர்வலம் நடைபெற்றது எனக்கு ஞாபகமிருக்கிறது. அப்பொழுது மதிப்புக்குரிய தபால் தந்தித் தொடர்பு அமைச்சர் திரு. குமாரசூரியர் யாழ்ப்பாணத்தில் இருந்தாரா என்பது எனக்குத் தெரியாது. நீதி[illegible]மச்சர் இதுபற்றி என்ன கூ[illegible]னாலும் 1961ம் ஆண்டு சத்தியாக்கிரகம்நடைபெற்றபொழுது கல்முனை பொத்துவில் திருக்கோணமலை மற்றும் இலங்கையின் சகல பகுதிகளிலும் இருந்து [illegible]ள் வந்து கலந்து கொண்டார்கள். யாழ்ப்பா...

## வித்தியோதய

# பல்கலைக்கழகத்தில் சிங்களத்தில் சட்டக் கல்வி

கொழும்பு, ஞாயிறு

வித்தியோதயாப் பல்கலைக் கழகத்தில் சட்டத்துறை நிறுவுவதற்கான நடவடிக்கைகளில்கல்வி அமைச்சர் திரு பதியுதீன் முகமத் ஈடுபட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இப்பொழுது இலங்க சட்டக் கல்லூரியில் விரிவுரைகள் ஆங்கிலத்திலேயே நடைபெற்று வருகின்றன. ஆனால் வித்தியோதயாவில் நிறுவப்படும் சட்டத்துறை விரிவுரைகள் சிங்களத்தில் மட்டுமே நடைபெறுமென இப் பல்கலைக்கழக அதிகாரிகள் தெரிவித்தனர்.

சிங்களத்தில் சட்ட நடவடிக்கைகளை சிறப்பாகச் செய்வதற்கு வசதி செய்யும் முகமாகவே இத் தீர்மானம் கொள்ளப்பட்டிருக்கிறதாம். (சி பி ஏ)

# செய்திச் சுருக்கம்

### மட்டுநகரில் கூட்டுறவுவிழா

சர்வதேசக்கூட்டுறவு தின விழா இம்மாதம் 24-ந்திகதி மட்டுநகரில் மட்டக்களப்பு மாவட்டக் கூட்டுறவு சமாசத்தினால் கொண்டாடப் படவிருக்கிறது.

### மேலும் 3 வானொலிநிலையங்கள்

கடந்த வெள்ளிக்கிழமை நடைபெற்ற பத்திரிகைமகாநாட்டில் இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தலைவரும், டைரக்டர் ஜெனரலுமான திரு. சுசில் முனசிங்கா, இலங்கையில் மேற்கு ஜேர்மன் உதவியுடன் மேலும் 3 வானொலி அஞ்சல் நிலையங்கள் நிறுவ இருப்பதாகவும் இது பற்றி ஜெர்மன் ஜனநாயகக் குடியரசுடன் பேச்சுவார்த்தை நடத்திவருவதாகவும் தெரிவித்தார்.

### வாழ்த்துச் செய்தி

மங்கோலியமக்கள்குடியரசின் தேசிய தினத்தை முன்னிட்டு பிரதமர் திருமதி பண்டாரநாயகா மங்கோலிய மக்கள் குடியரசின் அமைச்சரவையின் தலைவருக்கு வாழ்த்துச் செய்தி அனுப்பிவைத்தார்.

### பரீட்சை ரத்து

சென்ற ஆண்டு செப்டம்பர் மாதம் நடைபெற்ற ஆங்கில மாணவ ஆசிரியர்களுக்கான பரீட்சையை கல்வி அமைச்சு இரத்து செய்துள்ளது.

### 'அனுராதபுரத்தில் அமைக்கவும்'

அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள சிராவஸ்திரபுரம் கிராமசபை, ஆட்சிமன்றக் கட்டடத்தை அனுராதபுரத்தில் அமைக்குமாறு அரசாங்கத்தைக் கோரியுள்...

### பிரதமருக்கு வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் இசையாளர் ஐக்கிய அபிவிருத்திச் சங்கம் பிரதமர் திருமதி பண்டாரநாயக்காவுக்கு ஒரு வாழ்த்துச் செய்தியை அனுப்பியுள்ளது

'சோஷலிச அரசில் அமைப்பை உருவாக்க வேண்டுமென்ற உங்களதும் உங்கள் அரசாங்கத்தினதும் ஆசை நிறைவேறவும், இன மத, மொழி பேதமின்றி இந்நாட்டு மக்கள் ஒற்றுமையாக தங்கள் தலைமையின் கீழ் வாழவேண்டுமெனவும் வாழ்த்துகிறோம்' என மேற்படி வாழ்த்துச்செய்தியில் குறிப்பிடப்பட்டுள்ளது

மேற்படி சங்கத்தின் சார்பில் சங்கத்தலைவர் திரு. வி எம். சுந்தரம்' காரியதரிசி திரு. ஏ ராதாகிருஷ்ணன், பொருளாளர் திரு. கே. கணமூர்த்தி ஆகியோர் இவ் வாழ்த்துச்செய்தியைப் பிரதமருக்கு அனுப்பிவைத்துள்ளனர்.

— —

### தீர்மானங்கள்

மூளாய், ஞாயிறு

மூளாய்க் கிராமத்தை மூன்று வட்டாரங்களாகப் பிரிக்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்ற தீர்மானம் மூளாய் சனசமூக நிலைய கூட்டம் அண்மையில் நடைபெற்றபோது ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளும்போது அவரை மூளாய்க்கு அழைத்துக் கௌரவிப்பதென்ற தீர்மானமுட்பட வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கிறது. யார் எதற்காக இந்த விஷமத்தனமான செயலில் ஈடுபடுகிறார்களென்பது இதுவரை தெரியவில்லை. பொலிசார் இப்பொழுது விசாரணையி லீடுபட்டுள்ளனர். தீவிர விசாரணை நடத்தி இந்த தேச விரோத, சமூக விரோத செயல்களில் ஈடுபடுகிறவர்கள் யாராயிருந்தாலும் அவர்களை நீதிமன்றத்தின் முன் நிறுத்தி சரியான தண்டனை பெற்றுக் கொடுத்து இதுபோன்ற செயல்களுக்கு முற்றுப்புள்ளி வைக்கவேண்டும்.

எழுத்து அழிப்பு வேலைகளும், வீடுகளுக்கு அடைபவங்கள் இன்றும் மக்கள் மனதிலிருந்து மறைந்திருக்கமாட்டாது.

யார் என்ன காரணத்துக்காக இப்போது இந்த எழுத்து அழிப்பு விஷமத்தனத்தி லீடுபட்டாலும் அவர்களை மன்னிக்க முடியாது. இதுவிஷயத்தில் பொலிசாரின் விசாரணைகளுக்குப் பொதுமக்களும் ஒத்துழைப்புக் கொடுத்து நாட்டில் மீண்டும் இருள் சூழ்ந்த 1958-ம் ஆண்டு நிலையை ஏற்படுத்த எத்தனிக்கும் விஷமிகளுக்கு சரியான பாடம் படிப்பித்துக் கொடுக்கவேண்டியதவசியம்.

4 வெவ்வேறு நிர்வாகப் பிரிவுகள் உள்ளன. இவை ஸ்கொத்லாந்து அமைச்சரின் கட்டுப்பாட்டின் கீழ் அங்கு பரவலாக வமைந்துள்ளன. ஒற்றையாட்சி அமைப்பின்கீழ் கலாச்சாரம் நாகரீகம் உட்பட ஸ்கொட்லாந்து மக்களின் சட்டத்துறை ஆகியவற்றையும் வளர்த்துக்கொள்வதற்கு அவர்களுக்கு வாய்ப்புஇருக்கிறது. ஸ்கொட்லாத்தில் பிரித்தானிய நீதிமன்றங்களில் இருந்து வேறுபட்ட நீதிமன்றங்கள் உள்ளன. இவற்றின் சட்ட அமைப்பு வேறுபாடுடையது. உரோம சட்டவியலின் அடிப்படையில் இவை அமைந்துள்ளன.

மத்தியில் சமஷ்டி பற்றிதவறான பிரச்சாரம் நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. சிங்கள மக்களும்பிழையான கருத்துக்[...]நம்புகிறார்கள். சமஷ்டியென்றால் முதலாவதாக அதுநாட்டின் பிரிவினையெனவும் இரண்டாவதாக இந்தியாவுடன் இணைவதெனவும் அவர்களைத் தவறாக நம்பச் செய்துள்ளார்கள். எங்களுக்கு இந்தியாவுடன் எதுவித தொடர்பும் இல்லை, எங்களுக்கு இந்தியாவுடன் இணையவேண்டும் என்ற விருப்பும் இல்லை என்பதை இந்த வேளையில் உங்களுக்குத்தெரியப்படுத்த விரும்புகிறேன், இந்தியாவில் உள்ளதுபோன்ற சமஷ்டி அரசியல்அமைப்பையே நாம் இலங்கையில் அமைக்க வேண்டுமென விரும்புகின்றோம். அதாவது மத்திய அரசின் கட்டுப்பாட்டிற்குக் கீழுள்ள ஒரு சமஷ்டியரசியல் அமைப்பேயாகும்.

இந்த வேளையில் நாம் சமஷ்டி அரசைப் பெறுவதில் வெற்றியீட்டாதிருக்கலாம். ஆனால் இதிலிருந்து தமிழ்மக்களின் பெரும்பான்மையானவர்களை அங்கத்துவப்படுத்தும் எமது சமஷ்டிக்கட்சி சமஷ்டிக் கோரிக்கையை கைவிட்டு விடுமென்பதில்லை. நாம் அதை எப்பொழுதோ ஒரு நாள் பெறத்தான் போகிறோம். இந்த அரசாங்கத்திடமிருந்து பெறுவிட்டால் அடுத்த அரசாங்கத்திடமிருந்து பெறுவேம், அடுத்த அரசாங்கமும் தராவிட்டால் 25வருடங்கள்சென்று பெறுவோம். 25 வருடங்களிலும் கிடைக்காவிடில் 100 வருடங்களுக்குப் பின்னராவது சமஷ்டியரசை நாம் பெற்றே தீருவோம். இப்பொழுதும் எப்பொழுதும் நான் எந்த வேளையிலும்கூறுவது என்னவென்றால் எனது கட்சி ஒருபொழுதும் சமஷ்டிகோரிக்கையைக் கைவிடமாட்டாது இலங்கையில் ஒரு தமிழன் இருந்தாலும் இக்கோரிக்கையிருந்தே தீரும்.

இதுவரை எங்கள் திருத்தப்பிரேரணையின் முதல் அம்சம்பற்றி விளக்கமாகக் கூறினேன். அடுத்து எங்களது அடுத்த திருத்தப் பிரேரணை பற்றி குறிப்பிட விரும்புகிறேன்.

'சுயபாஷையே போதனமொழியாக விருக்கும். ஆங்கிலமொழிப் போதனைக்கு போதிய வசதிகள் செய்து கொடுக்கப்படும்' சிம்மாசனப் பிரசங்கம் இவ்வாறு கூறுகிறது.

இதற்கு எங்களது திருத்தப் பிரேரணை கீழ்க்கண்டவாறு கூறுகிறது.-

...யும் பொறுத்தளவில்- எங்களது தாய்மொழி தமிழ் மொழியாகும். இலங்கையின் எந்தப்பகுதியில் இருந்தாலும் ஒரு தமிழ் பிள்ளை தாய்மொழியாகிய தமிழ் மொழிமூலம் கல்விபெற சட்டத்தில் எங்களுக்கு இடம் அளிக்கவேண்டும். இதுவே எங்களது கோரிக்கையாகும்.

ஒரு பாடசாலையில் ஒரு தமிழ்பிள்ளை இருந்தாலும் அவனுக்கு இந்தச் சலுகை அளிக்கப்படல்வேண்டும்.

...ஆலும் 1961ம் ஆண்டு சத்தியாக்கிரகம்நடைபெற்றபொழுது கல்முனை பொத்துவில் திருக்கோணமலை மற்றும் இலங்கையின் சகல பகுதிகளிலும் இருந்து [...]ள் வந்து கலந்து கொண்டார்கள் யாழ்ப்பாணத்திலிருந்து13மைல் தூரத்திலுள்ள ஊர்காவற்றுறையில் காலை ஆரம்பமான ஊர்வலம் மாலை யாழ்ப்பாணம் வந்துசேர்ந்தது இது 8மைல் நீளமான பெரிய ஊர்வலமாகும்.

(தொடரும்)

# சிம்மாசனப் பிரசங்கத்தை காங்கிரஸ் ஏன் ஆதரித்தது?

## வட்டுக்கோட்டை எம். பி. விளக்கம்

சங்கானை, ஞாயிறு

''இருள் சூழ்ந்த நிலையில் தமிழினம் தற்போது இருக்கின்றது. இதை நல்லநிலைக்குக் கொண்டு வருவதற்கு போராட்டங்களோ சத்தியாக்கிரகங்களோ பயன்படாது. இது போன்ற நடவடிக்கைகளால் பெரும்பான்மைச் சமூகத்தவர்களாகிய சிங்கள மக்களிடமிருந்து நாம் வெறுப்பைத் தேடிக்கொள்ளவேண்டி ஏற்படும். இதனால்தான் தமிழ் காங்கிரஸ் கட்சி சிம்மாசனப் பிரசங்கததிற்குத் திருத்தப்பிரேரணைகள் கொண்டு வரவில்லை.''

இவ்வாறு வட்டுக்கோட்டை எம். பி. திரு. ஆ. தியாகராசா கூறினர். சாங்கானையில் திரு. தியாகராசாவுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.

திரு. தியாகராசாவும் பாரியாரும் கூட்டமைதானத்துக்கு சண்டிலிப்பாயிலிருந்து ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர். திரு. அ. க. அழகசுந்தரம் தலைமையில் கூட்டம் நடந்தது.

திரு. தியாகராசா தொடர்ந்து பேசியதாவது:- புதிய அரசாங்கம் நிகழ்த்திய சிம்மாசனப் பிரசங்கத்தில் தமிழ் இனத்துக்குரிய பிரச்னைகளுக்கு தீர்வுகாணும்விடயங்களும் இடம்பெற்றுள்ளன, தொடர்ந்து என்ன நடக்கப்போகின்றது என்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

தமிழருக்குப் போதனமொழி தமிழ்மொழியாக இருக்கவேண்டும் என்றும் தமிழர் வாழுமிடமெல்லாம் நீதிமன்றமொழி தமிழாகவிருக்கவேண்டும் என்றும் தமிழ் மக்கள் தமிழில் அரசாங்கத்துடன் தொடர்பு கொள்ளக்கூடியதாக இருக்கவேண்டும் என்றும் நாம் வற்புறுத்தி வருகின்றோம்.

தமிழர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசங்களில் தமிழிலேயே விசாரணைகள் நடாத்துவதற்கு நியாயவாதிகள் முன்வரவேண்டும். அப்போதுதான் எமது உரிமைகளை படிப்படியாக பெறவாய்ப்பு ஏற்படும்.

வெளி ஊர்களில் தொழில்கள் நடாத்தும் நம்மவர்கள் தங்கள் பிரதேசங்களில் தொழிற்சாலைகளையும் வியாபார நிலையங்களையும் நிறுவுவதால் இங்குள்ள படித்த வாலிபர்களின் வேலையில்லாத் திண்டாட்டங்கள் தீர்வதுடன் சொந்த கிராமங்களும் மேலோங்கும்.''

வழக்கறிஞர் எம். கே. சுப்பிரமணியம, முன்னை நாள் ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபர் திரு. எஸ். சுப்பிரமணியம், இளைப்பாறிய உடும்பிராய் இந்துக் கல்லூரி அதிபர் திரு. கே வயித்திலிங்கம், திரு. எஸ். இராசா, சங்கானை



ப. ச. தலைவர் திரு. வயிரமுத்து ஆகியோரும் பேசினர்.

## கூட்டுறவு ...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

ளது. இவ்வேளையில் கூட்டுறவு இயக்கம் நல்லமுறையில் இயங்கச்செய்வது மக்கள் கடமை. நிர்வாகத்தில் ஏற்படும் சீர்கேடுகளைச் சரியாக்குவது மக்களாகிய உங்கள் பொறுப்பு, நிர்வாகம் திருப்தியாகச் செயல்படாதிருப்பின் திருப்தியான முறையில் இயங்கக்கூடிய புதிய உத்தியோகஸ்தர்களை மக்கள் தெரிவு செய்ய வேண்டும்.

சமாசம் கூட்டுறவு மூலம் கைத்தொழில்களை ஆரம்பிக்கும் போது கவனமாகஇருத்தல் வேண்டும். அதற்குமுதலிடப்படும்பணம் மக்களுடையது.

# 'மன்னர் முன்னேற...'

## அரசாங்கஅதிபர் கூறும்வழி

முசலி, ஞாயிறு

'டென்மார்க, சுவீடன் போன்ற நாடுகள் பொருளாதாரத்துறையிலும். சமூக சமுதாய முன்னேற்றத்திலும் முன்னணியில் இருப்பதற்கு அந்நாட்டின் பண்டைக்காலம் தொடக்கம் இன்றுவரை அனுசரித்து வரும் கூட்டுறவு மனப்பான்மையே காரணமாகும், கூட்டுறவு என்னும் பண்பு இந்நாடுகளில் வளர்பிறையைப் போல் வளர்ந்ததினால்தான் இன்று இந்நாடுகள் உலகில் முன்னணியில் திகழ்கின்றன. இப்பகுதி மக்களும் கூட்டுறவு மனப்பான்மையுடன் உழைத்தால் மன்னர் பிரதேசத்தை வளம்கொழிக்கும் பூமியாக மாற்றலாம்'

இவ்வாறு அரசாங்க அதிபர் திரு எஸ் கதிர்காமநாதன் முசலிப் பிரிவு சர்வதேச கூட்டுறவுத் தினவிழாவில் பேசும்போது குறிப்பிட்டார்.

நானாட்டான் பகுதி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாஜத்தின்ஆதரவில் செம்மன்தீவு நீர்ப்பாசன இலாகா விளையாட்டு மைதானத்தில் இவ்விழா நடைபெற்றது முசலிப்பிரிவு காரியாதிகாரி திரு வை சொக்கலிங்கம் தலைமையில் விழா நடைபெற்றது கலை நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன

வெற்றிபெற்றோருக்கு மன்னார் உபபிரிவு நீர்ப்பாசன பொறியியலாளர் திரு கனகலிங்கம் பரிசுகள்வழங்கினார்.

## தந்திக்கம்பிகள் களவு

எழுதுமட்டுவாள், ஞாயிறு

எழுதுமட்டுவாள் பகுதியில் தந்திக்கம்பிகள் அதிகமாகக் களவாடப்படுவதாக புகார் செய்யப்பட்டுள்ளது அண்மையில் தச்சன்தோப்புப் பகுதியில் ரூபா 2,500 பெறுமதியான தந்திக் கம்பிகள் களவாடப்பட்டுள்ளதாம்.

## ஜீவனாம்சம் கோரி வழக்கு

மட்டுவில், ஞாயிறு

'நான் பிரதிவாதியைச் சட்டப்படி திருமணம் செய்துகொண்டு ஐந்து வருடங்களாகின்றன. விவாகமாகிச் சில காலத்தில் பிரதிவாதி என்னைக் கைவிட்டு விட்டார். எனக்கு வாழ்க்கைக்குப் பெரிய கஷ்டமாக இருக்கிறது. அவரிடமிருந்து எனக்கு மாதம் ரூபா 65 ஜீவனாம்சம் பெற்றுத் தர வேண்டும்'.

இவ்வாறு வரணி இடைக்குறிச்சியைச் சேர்ந்த வள்ளிப்பிள்ளை பாலசுப்பிரமணியம் என்ற இளம் பெண், தனது கணவரான பாலசுப்பிரமணியம் மீது தொடரப்பட்ட ஜீவனாம்ச வழக்கின் போது சாவகச்சேரி மாஜிஸ்திரேட் திரு கே விக்னராஜா முன்னிலையிற் கூறினர்.

இந்த வழக்கை விசாரணைக்கு எடுத்துக்கொண்ட மாஜிஸ்திரேட், விசாரணையை வேறொரு தேதிக்கு ஒத்திவைத்தார்.

## என் தலைக்கு பாராட்டு

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலை பலநோக்குக் கூட்டுறவுச் சங்கங்களின் ஆதரவில் நடைபெற்ற கூட்டுறவுதின விழாவில் ''என் தலையில்'' என்ற கூட்டுறவு நாடகம் பாராட்டைப் பெற்றது. இளவாலை கன்னியர்மட கூட்டுறவு பண்டகசாலையின் சார்பில் மாணவிகளால் இது நடிக்கப்பெற்றது.

அமைக்கவும்'

அனுராதபுரம் மாவட்டத்திலுள்ள சிராவஸ்திரபுரம் கிராமசபை, ஆட்சிமன்றக் கட்டடத்தை அனுராதபுரத்தில் அமைக்குமாறு அரசாங்கத்தைக் கோரியுள்ளது

## நிதி அமைச்சர் வேண்டுகோள்

சம்பளக் கமிஷனால் தெரிவிக்கப்படும் சிபாரிசுகள் அரசாங்கத்தினால் தாமதமின்றி அமுல் செய்யக்கூடிய வகையில் அமைதல் வேண்டும் என நிதி அமைச்சர் டாக்டர் என். எம். பெரேரா கமிஷனிடம் தெரிவித்துள்ளார். 1971-ம் ஆண்டுமார்ச் மாதத்திற்கு முன்னதாக கமிஷனர்கள் தமது இறுதி அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டுமென அவர் கேட்டுள்ளார்.

## பண்டாரநாயகா சிலை

வெண்கலத்தினால் வார்க்கப்பட்டுள்ள காலஞ்சென்ற பிரதமர் திரு எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயகாவின் உருவச்சிலை ஒன்றை கண்டி மாநகரில்நிறுவுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுவருகின்றன.

## பாம்புடன் மோதிய 'மேரி' இரண்டும் மாண்டன

சித்தன்கேணி, திங்கள்

'மேரி' என்ற அல்சேஷன் நாயும். பலறநாகபாம்பும் ஒன்றோடொன்று மூர்க்கத்தனமாகப் போராடியதன் விளைவாக ஈற்றில் இரண்டு ஜீவன்களுமே உயிர் துறந்தன. இப்பரிதாப சம்பவம் நேற்று முன்தினமிரவு சித்தன்கேணி கலைநகரில் நடைபெற்றது.

அன்றிரவு 8 மணியளவில் இதே பாம்பு அயல் வீட்டுப் பெண்மணியையும் தீண்டமுற்பட்டபோது அவர் சாதுரியமாகத் தப்பிவிட்டார். இதன் பின்னரே இம்பாம்பு வீட்டைக் காக்கும் 'மேரி' யிடம் அகப்பட்டுக்கொண்டது. 'மேரி'யும், பாம்பும் சமரிடுவதைக் கண்ட வீட்டுக்காரரும் பாம்புக்கு அஞ்சி அதனைத் தாக்கவில்லையாம். இறுதியில் பாம்பைத் தீர்த்துக்கட்டிவிட்டுத் தானும் பாம்புக்கு அருகில் உயிர் நீத்தது. இறந்த 'மேரி' இரண்டு மாதம் தாய்மை அடைந்திருந்தது. அடுத்த நாட் காலையில் 'மேரி'யின் வீட்டார் இக்கோரக் காட்சியைக் கண்டனர். 'மேரி' இரண்டு மாதங்களுக்கு முன்பும் ஒரு பாம்பைக் கொன்றதாகவும் வீட்டுக்காரர் தெரிவித்தனர்.

டாரநாயக்கா யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொள்ளும்போது அவரை மூளாய்க்கு அழைத்துக் கௌரவிப்பதென்ற தீர்மானமுட்பட வேறு பல தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன.

0 0 0

அல்லைப்பிட்டி, ஞாயிறு

வேலணை முதலாம்வட்டாரத் தமிழரசுக் கட்சி வாலிப முன்னணிக் கூட்டம் திரு. க. தம்பாபிள்ளை தலைமையில் நடைபெற்ற போது வேலணை பிரசவ விடுதிக்கு டாக்டர்களும், தாதிமார்களும் நியமித்து அத்தியாவசிய தேவைகளைப் பூர்த்தியாகவேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டுமென சம்பந்தப்பட்டவர்களை கோருவதெனவும் தீவுப்பகுதி பஸ் கட்டணத்தை குறைக்க நடவடிக்கை எடுப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

## இணைக்குக!

பண்டத்தரிப்பு, ஞாயிறு

தெல்லிப்பளைக் கிராமசபையுடன் இணைந்திருக்கும் மாரீசன் கூடல் கிராமத்தின் ஒருபகுதியைப் பண்டத்தரிப்புக் கிராமசபையுடன் இணைக்குமாறு கோரி மாரீசன்கூடல் கிராமமக்கள் காங்கேசன்துறை எம். பி. திரு. எஸ். ஜே வி. செல்வநாயகத்திற்குமகஜர்ஒன்றை சமர்ப்பித்துள்ளார்கள்.

## மரியாயின் சபை விழா

பண்டத்தரிப்பு, ஞாயிறு

இளவாலைக் கியூரியாவின் கீழுள்ள மரியாயின் சபையினர் விழா படுத்தித்துறை தும்பளை புனித லூர்து மாதா ஆலயத்தில் நடைபெற்றது. சில்லாலை, மாதகல், இளவாலை, போயிட்டி, மாரிசன்கூடல் ஆகிய கிராமங்களைச் சேர்ந்த 70க்கும் மேற்பட்ட சேனையாளர் இதில் கலந்துகொண்டனர். மேற்படி சபையின் ஞான ஆலோசகர் வண. பிதா ஜோசப் அடிகளாரும் கலந்துகொண்டனர்.

## நியமனம்

பண்டத்தரிப்பு, ஞாயிறு

சிலாப மேற்றிராணியாரான வண எட்மன்ட் பீரிஸ் அடிகளார் கலாச்சார மந்திரியினால்தேசியபுராதன சாதன இலாகாவின்விசேட ஆலோசகராக நியமனம் செய்யப்பட்டிருக்கிறார். இவருடன் டாக்டர் ஜீ. சி. மென்டிஸ் பேராசிரியர் பி. ஈ. ஈ. பெர்ணுந்து டாக்டர் ரி. அபயசிங்கா ஆகியோரும் நியமனம் பெற்றுள்ளனர்.

இப் பத்திரிகை ''ஈழநாடு'' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலை வீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1970-ம் ஆண்டு ஜூலை மாதம் 13-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org